விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු


வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 07.03.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 97 | பக்கங்கள் : 16






07

இராணுவத்தினரை நாங்கள் காட்டிக் கொடுக்கமாட்டோம்



08

மிரட்டும் இமயமலையின் பெரிய ஆபத்து



12

பாப்பரசருக்கு அமோகமான வரவேற்பு



14

மைத்திரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா?

# யாழ்.ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர் மீது அமைச்சர் டக்ளஸ் நேற்றுப் பகிரங்க குற்றச்சாட்டு

## அரச அதிகாரிகள் மீது கடுமையான அழுத்தம் என சாடல்



யாழ்ப்பாணம், மார்ச்.07

பொம்மையாக இருந்து அரசியலுக்கு வந்தவன் அல்ல எனவும், நெருப்பாறு கடந்தே அரசியலுக்குள் நுழைந்ததாகவும், கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி செயல்பாடுகளுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் தொடர்புகள் இருக்கலாம் எனவும் ஆனால், எவரும் தமது சுய நலன்களுக்காக, திட்டத்தை நடத்த முற்படக்கூடாது என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

02

## இலங்கை போர்க்குற்ற விசாரணை

# ஜெனிவாவில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவளிக்கவேண்டும் இந்தியா!



## பிரதமர் மோடியிடம் தி.மு.க. வேண்டுகோள்

சென்னை, மார்ச் 07

ஈழத் தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையில் இந்தியா ஆதரவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

02

# நேற்று நால்வர் மரணம்!

## கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பு 497 ஆக அதிகரிப்பு

கொழும்பு, மார்ச்.07

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 497 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று மேலும் 4 பேரின் மரணம் உறுதியாகிய நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

நாட்டில் நேற்று மேலும் 190 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நிலையில் மொத்த தொற்றா

02



# அம்பாறையில் போராட்டத்துக்கு நீதிமன்று நேற்றுத் தடை விதிப்பு

அம்பாறை, மார்ச்.07

அம்பாறை, பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்றுவரும் சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கு நீதிமன்றத் தடை உத்தரவு பொலிஸாரால் வழங்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகி தொடர்ந்து முன்

02

## இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறு ஆதரவு திரட்டும் கனடா, பிரி. தூதர்கள்!

கொழும்பு, மார்ச் 08

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு

02

# நேற்றும் 8 பேரின் சடலங்கள் ஓட்டமாவடியில் நல்லடக்கம்

மட்டக்களப்பு, மார்ச்.07

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களில் நேற்று 8 பேரின் சடலங்கள் மட்டக்களப்பு ஓட்டமாவடியில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

நேற்று இரண்டாவது நாளாகவும், சடலங்களை அடக்கம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (அ-எ)

# ரயில் மோதி மரணித்தவர் உட்பட வடக்கில் நால்வருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், மார்ச்.07

வடக்கு மாகாணத்தில் மேலும் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

மன்னாரில் நேற்று ரயிலுடன் மோதி உயிரிழந்தவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்

02

# இலங்கை மீதான பிரேரணை நிறைவேறுவதை உறுப்பு நாடுகள் உறுதிப்படுத்துவது அவசியம்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 07

இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணையை நிறைவேற்றுவதை உறுதி செய்ய உறுப்பு நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தற்போதைய நிலைமையில் எந்த ஒரு விடயத்திலும் அரசாங்கம் விடுதலைப்புலிகளைத் தொடர்புபடுத்த வேண்டிய அவசியம் இல்லை எனவும் கூட்டமைப்பு தெரி

02

## யாழ். ஒருங்கிணை...

தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின், சௌபாக்கியா வாரத்தை அங்குரார்ப்பணம் செய்து பயனாளிகளுக்கு உதவித்திட்ட காசோலைகளை வழங்கி வைக்கும் நிகழ்வில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சமுர்த்தித் திட்டத்தை யாழ்ப்பாணத்துக்கு நெருக்கடியான சூழலில் நானே கொண்டுவந்தேன்.

சமுர்த்திச் செயல்பாடுகளுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் தொடர்புகள் இருக்கலாம்.

ஆனால், எவரும் தமது சுயநலன்களுக்காக இந்த வேலைத்திட்டத்தை நடத்த முற்படக்கூடாது.

யாழ். மாவட்ட மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரின் பெயரால், அவரின் இணைப்பாளர்கள் எனப் படுவோர் மிரட்டல் விடுப்பதாகவும், அழுத்தம் கொடுப்பதாகவும், பல முறைப்பாடுகள் எனது கவனத்துக்கு கொண்டுவரப்படுகின்றன.

அவ்வாறான அநாகரிகமான செயல்பாடுகள், குறித்த ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருக்கு தெரிந்து நடக்கின்றதா? தெரியாமல் நடக்கின்றதா? என்பது தொடர்பில் அவருடன் கலந்துரையாடவுள்ளேன்.

அவருக்குத் தெரியாமல் நடக்குமாக இருந்தால், இவ்வாறான அநாகரிகமான செயலை அவர் கட்டுப்படுத்தவேண்டும்.

மாறாக, அவருக்குத் தெரிந்துதான் அரச அதிகாரிகளுக்கான மிரட்டலும், அழுத்தங்களும் அவரது இணைப்பாளர்களால் விடுக்கப்படுமானால் அதுதொடர்பில் ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் பேசி முடிவு ஒன்றைக் காண்பேன்.

யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல கிளிநொச்சி அதிகாரிகளிடமும் அழுத்தங்கள் பிரயோகித்து இருக்கின்றனர்.

எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை யாழ். அரசாங்க அதிபரிடம் கேட்டுத்தெரிந்து கொள்ளுமாறு, ஆலோசனை கூறியிருக்கின்றார்கள்.

ஆனால், சிரேஷ்ட அதிகாரியான கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், யாருடைய ஆலோசனையையும் கேட்கும் அவசியம் தனக்கு இல்லை என்று தகுந்த பதிலளித்துள்ளார்.

யாழ்., கிளிநொச்சி மக்களால் தொடர்ச்சியாக தெரிவு செய்யப்பட்டு சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினராகவும், சிரேஷ்ட அமைச்சராகவும் இருக்கின்ற என்னை, இந்த மக்களிடமிருந்து சண்டித்தனத்தால் பிரித்துவிடமுடியாது.

நான் தூரத்தே இருந்து வேடிக்கை பார்த்துவிட்டு, அதாவது ஒரு பொம்மையாக இருந்து விட்டு அரசியலுக்குள் வரவில்லை.

பல நெருப்பாறுகளைக் கடந்தே தமிழ் மக்களின் அரசியலுக்குள் வந்தவன்.

அரசியல் தலைமைகளின் தவறான தீர்மானங்களால், சொல்லொணாத் துன்பங்களையும் கணக்கெடுக்க முடியாத இழப்புக்களையும், மக்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போது கிடைத்திருக்கின்ற வாய்ப்புக்களை பயன்படுத்தி, மக்களின் வாழ்வை கட்டியெழுப்ப நான் முயற்சிக்கின்றேன்.

யதார்த்தத்தை புரிந்துகொண்டு மக்கள் சரியான தெரிவுகளை மேற்கொண்டு பயனடைய வேண்டும்-எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில், கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று சௌபாக்கிய வாரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (அ-எ)

## அம்பாறையில்...

நெடுக்கப்பட்டுவரும் நிலையில், கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி இந்திக்க உதயங்கர தலைமையிலான பொலிஸ் குழு நீதிமன்றத் தடை உத்தரவை நேற்று சனிக்கிழமை மாலை வழங்கியுள்ளது.

அத்துடன், கல்முனை நீதிவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையை அவ்விடத்தில் பொலிஸார் வாசித்துக் காட்டினர்.

இதன்போது, அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், கல்முனை இளைஞர் சேனையின் முன்னாள் தலைவர் தாமோதரம் பிரதீபன், அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி, நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் என்.தர்சினி, கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன் உட்பட பலருக்கு நீதிமன்றத் தடை உத்தரவு வழங்கப்பட்டது. (அ-எ)

## நேற்று நால்வர்...

ளர்களின் எண்ணிக்கை 85 ஆயிரத்து 150 ஆக அதிகரித்துள்ளது.

இதுதொடர்பான அறிக்கையை சுகாதார மேம்பாட்டுப் பணியகம் நேற்று இரவு வெளியிட்டுள்ளது.

இதனடிப்படையில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 448 பேர் குணமடைந்த நிலையில் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 81 ஆயிரத்து 769 ஆக அதிகரித்துள்ளது.

இதனால் குணமடைந்தவர்களைத் தவிர்த்து 2 ஆயிரத்து 884 பேர், வைத்தியசாலைகள் மற்றும் கொரோனா சிகிச்சை நிலையங்களில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும் கொரோனா தொற்றால் இதுவரை 497 பேர் உயிரிழந்தனர். (அ-எ)

## இலங்கைக்கு...

எதிராக வாக்களிக்கவேண்டும் எனக் கொழும்பின் உள்ள பேரவை உறுப்பு நாடுகளின் தூதுவர்களிடம் அனுசரணை நாடுகளின் தூதுவர்கள் இருவர் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் சாரா ஹல்டன் தென்கொரியத் தூதுவரையும் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவையும் கடந்த இரண்டாம் திகதி சந்தித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கான கனடாத் தூதுவர் டேவிட் மக்கினன் இலங்கைக்கான பங்களாதேஷ் தூதுவரைச் சந்தித்து பேச்சுக்களை மேற்கொண்டார்.

பங்களாதேஷும் தென்கொரியாவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இம்முறை அமர்வில் வாக்களிக்கும் தகுதி பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## ரயில் மோதி...

வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று 457 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில்4 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னார் பொது வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

மன்னாரில் நேற்றுக் காலை ரயிலில் மோதுண்டு உயிரிழந்த 58 வயது நபர் ஒருவருக்கு இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அவரது சடலத்தில் அன்ரிஜென் பரிசோதனை செய்யப்பட்டபோது தொற்று கண்டறியப்பட்டது. அதனையடுத்து பி.சி.ஆர். பரிசோதனையும் செய்யப்பட்டு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட அக்கராயன்குளத்தில் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் இருவரும் மல்லாவியில் இடம்பெற்ற இறுதிச் சடங்கு ஒன்றுக்கு சென்று திரும்பிய நிலையில் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள் என்றும் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (அ-எ)

வாக்கெடுப்பில் தோற்றாலும்

# போர்க்குற்ற விசாரணை என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை

### அமைச்சர் சரத் வீரசேகர மீண்டும் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 07

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரும் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் தோல்வியுற்றாலும் உள்ளக விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையிட விடப்போவதில்லை என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், எவர் வலியுறுத்தினாலும் போர்க்குற்ற விசாரணையை நடத்த இடமளிக்கப் போவதில்லை என்றும் கூறினார்.

இலங்கைக்கு எதிராக கொண்டுவரும் பிரேரணை குறித்து இந்தியா தற்போது அமைதியாக இருந்தாலும் இறுதி நேரத்தில் எமக்கு ஆதரவாகவே செயற்படுவார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கை தொடர்பாக முன்வைத்த அறிக்கை பொய்யான அறிக்கை என குறிப்பிட்ட சரத் வீரசேகர, இந்த அறிக்கையை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

## இலங்கை மீதான...

வித்துள்ளது.

இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இருந்து விலகுவதாகவும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையை நிராகரிப்பதாகவும், வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருந்த நிலையில், அவர் தெரிவித்த கருத்து தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

தற்போதைய நிலைமையில், எந்த ஒரு விடயத்திலும், அரசாங்கம் விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டிக்கொண்டு இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

புலிகளைக் குறிப்பிட்டு இலங்கை அரசாங்கம் பிரச்னையை தெளிவுபடுத்த முயற்சிக்கின்றது.

தமிழ்த் தலைவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி இருந்தால், புலிகள் உருவாகியிருக்கமாட்டார்கள்.

நியாயமான கோரிக்கைகளை முன்வைத்த தமிழர்கள் அச்சுறுத்தப்பட்டதுடன் பாதிக்கும் மேற்பட்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

அதன் பின்னரே விடுதலை புலிகள் அமைப்பு உருவாகியது.

ஒருமுறை தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அத்தீர்மானத்தில் இருந்து வெளியேற முடியாது.

இலங்கையின் குறிப்பிட்ட முயற்சிகளின் தோல்விகளை சரியாக சுட்டிக்காட்டியுள்ள ஆணையாளரின் அறிக்கையை பலர் வரவேற்றுள்ளனர்.

உரிய நடைமுறைகள் மூலம் மனித உரிமைகள் தொடர்பான நிலைமையை விசாரிப்பது மனித உரிமைகள் பேரவையின் நியாயமான செயல்பாடாகும். இது நாட்டின் இறையாண்மை அல்லது பிராந்திய ஒருமைப்பாட்டை மீறுவதாக அமையாது.

30/1 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியமையே, 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணம் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன சம்பந்தப்படுத்த முயற்சித்தார்.

ஆனால், யுத்தத்தின்போது வலிந்து காணாமல்போன பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் குறிப்பாக இறுதியில் படையினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை விளக்க அவர் முன்வரவில்லை.

உண்மையை அறிந்து கொள்வதற்கும் நீதியை வழங்குவதற்கும் இலங்கை எந்த விசாரணையும் நடத்தவில்லை.

நிறைவடைந்த விசாரணைகளின் அடிப்படையில் கூட நீதியை வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

புதிய அரசமைப்பை இயற்றவும், அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் மற்றும் பிற விடயங்களில் முக்கியமான ஒருமித்த கருத்து எட்டப்பட்ட இருந்த நிலையில், தற்போதைய அரசாங்கம் எதிராகச் செயற்பட்டது.

இந்த நிலையில், இலங்கைக்கு எதிரான புதிய பிரேரணை, 46/1 ஐ நிறைவேற்றுவதை உறுதி செய்ய, உறுப்பு நாடுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றுள்ளது.

## ஜெனிவாவில்...

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

"ஈழத்தமிழர்களுக்கு எதிரான போர்க் குற்றத்திற்குப் பொறுப்பான இலங்கை அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தும் தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்ற வலியுறுத்தி லண்டனில் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் சகோதரி அம்பிகையின் உணர்வுக்கும், இலங்கையில் வாழும் ஈழத்தமிழர்களின் உணர்வுக்கும் - தொப்புள் கொடி உறவாம் ஈழத்தமிழர்களின் மீது தமிழ்நாட்டில் வாழும் ஏழு கோடி தமிழர்களுக்கு இருக்கும் உணர்வுக்கும் மத்திய அரசு மதிப்பளிக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இதே கோரிக்கையை இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்களின் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒருமுகமாக, ஏற்கனவே இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு முன்வைத்திருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்தக் கோரிக்கைகளை ஆதரித்து பிரதமருக்குக் கடந்த ஜனவரி மாதத்திலேயே கடிதம் எழுதி - அதில் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பமிட்டிருந்ததை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அக்கடிதத்தில், "கடந்த காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததை இந்தத் தருணத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

ஆகவே ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள மனித உரிமை ஆணையத்தின் 46ஆவது கூட்டத்தில் மற்ற உறுப்பினர்களுடன் இந்தியா ஒருங்கிணைந்து செயல்பட்டு - இலங்கையில் உள்ள தமிழர் கட்சிகளின் கோரிக்கை நிறைவேறுவதை பிரதமர் நரேந்திர மோடி உறுதி செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" எனக் கோரிக்கை விடுத்திருந்தேன்.

ஆகவே, ஈழத்தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை மீதான வாக்கெடுப்பு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நடைபெறவிருக்கின்ற இந்தத் தருணத்தில், ஈழத்தமிழர் அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளை ஆதரித்தும் - இலங்கையில் வாழும் ஈழத் தமிழர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையிலும் இந்தியா வாக்களிக்கவேண்டும்.

அதற்கு ஆதரவாக உறுப்பு நாடுகளைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் எனவும் மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடியைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான போர்க் குற்ற விசாரணை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குச் செல்வதை ஐ.நா மனித உரிமை மன்றக் கூட்டத்தில் உறுதி செய்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பிரதமர் மோடி தனது நேரடிப் பார்வையில் எடுத்திடவேண்டும் எனவும் - இலங்கை அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டினை ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் இந்தியா எடுத்துவிடக் கூடாது என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்" என வலியுறுத்தியுள்ளார். (அ)

Eelanadu
07.03.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, மாசி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# புதிய பிரேரணை

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில், இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்படவுள்ள இரண்டாவது வரைபும் தற்போது வெளியாகியிருக்கின்றது. பூச்சிய வரைபில் இடம்பெற்ற சில சொற்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும்கூட, அடிப்படையில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்படவில்லை. இது தொடர்பில் ஏற்கனவே ‘ஈழநாடு’ அறிவுறுத்தியிருந்தது. தமிழர்கள் எதிர்பார்ப்பதுபோன்ற விடயங்கள் புதிய பிரேரணையில் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதை நாம் ஏற்கனவே அறிவுறுத்தியிருந்தோம். இந்த யதார்த்தத்தை தமிழ் தேசிய தரப்புக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறில்லாது, இணைத் தலைமை நாடுகள்மீது ஆவேசப்படுவதால் எவ்வித பயனுமில்லை. ஏன் கடுமையான பிரேரணையொன்றை முன்வைக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது?

2012இல் இலங்கையின்மீது முதலாவது பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து தொடர்சியாக, 2013, 2014இல் இலங்கையின்மீது பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன. இந்த நிலையில்தான் 2015இல் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட்டது அல்லது ஏற்படுத்தப்பட்டது. ஆனால், ஆட்சி மாற்றம் எதிர்பார்த்தது போன்று வெற்றியளிக்கவில்லை. மேற்குலகின் நண்பனாக நோக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவினால் ஒரு வலுவுள்ள ஆட்சியை ஸ்தாபிக்க முடிந்திருக்கவில்லை. இந்த பின்புலத்தில், ஆட்சி மாற்றத்தை உந்தித்தள்ளிய வெளித்தரப்புக்கள் ஏமாற்றமடைந்தன. இவ்வாறானதொரு சூழலில்தான் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் மீண்டுமொரு தலையீட்டைச் செய்யவேண்டிய நிர்பந்தத்தில் மேற்குலக தாராளவாத நாடுகள் தள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழர்கள் எதிர்பார்ப்பது போன்று விடயங்கள் இலகுவானதல்ல. ஏனெனில், இலங்கையின் மீதான பிரேரணை என்பது ஒரு குறித்த நாட்டை இலக்குவைத்து வெளிவருவருகின்ற பிரேரணைகள். இதனை அரசாங்கம் எதிர்க்கின்றது. அதேவேளை இலங்கைக்கு ஆதரவான பேரவையின் உறுப்பு நாடுகளும், குறித்த நாட்டை இலக்கு வைக்கும் பிரேரணையை எதிர்க்கின்றன. ஏனெனில், பேரவையின் உறுப்பு நாடுகளில் பெரும்பாலானவற்றுக்கு மனித உரிமை முதலாவது விடயமல்ல. இரண்டாவது, மூன்றாவது விடயங்களே. தங்களின் நலன்களை நிறுத்துப் பார்த்துத்தான் அந்த நாடுகள் பிரேரணையை ஆதரிக்கும் அல்லது, எதிர்க்கும். பெரும்பாலான நாடுகளை திருப்திப்படுத்தினால்தான் பிரேரணையை வெற்றிபெறச் செய்யலாம். இந்த உள் நிலைமைகளை கருத்தில் கொண்டுதான், இணைத்தலைமை நாடுகள், முக்கியமாக பிரித்தானியாவும் கனடாவும் செயற்பட்டுவருகின்றது.

இந்த பின்புலத்தில் நோக்கினால், முதலில் பிரேரணையை வெற்றிபெறச் செய்யவேண்டும் என்பதே இப்போதைக்கு முதலாவது இலக்காகும். ஏனெனில், இதில் தோல்வியடைந்தால் இணைத் தலைமை நாடுகளை பொறுத்தவரையில் அது மோசமான இராஜதந்திர தோல்வியாகிவிடும். தாங்கள் ஒரு பிரேரணையை கொண்டு வந்து தோற்பதா அல்லது அதில் வெற்றிபெறுவதா என்பதுதான் அவர்களது முதலாவது பிரச்னை. வெற்றிபெற வேண்டுமாயின், உறுப்பு நாடுகள் ஏற்றுக்கொள்ளக் கூடியளவிற்கு, பிரேரணையில் மாற்றங்களை செய்யவேண்டும்.

அண்மையில் ‘டான்’ தொலைக்காட்சியில் இடம்பெற்ற, இலங்கைக்கான அமெரிக்க தூதுவருடனான நேர்காணலின் போது, அவர் இதனை மிகவும் விளங்கக்கூடிய வகையில் குறிப்பிட்டிருந்தார். பிரேரணையில் பயன்படுத்தப்படும் மொழி, பேரவைக்குள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கவேண்டும். அதேவேளை, இலக்கைக்குள் பிரயோகிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இதுதான் உண்மை நிலவரம். இதனை விளங்கிக்கொள்ளாமல் எதிர்பார்ப்புக்களை வளர்க்கும் போது, ஐ. நா.விற்கான முன்னைநாள் உதவிச் செயலாளர் நாயகம் சார்ள்ஸ் பெட்ரே கூறியது போன்று, தமிழ் மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும். தமிழ் மக்கள் ஏமாற்றமடையாதிருக்க வேண்டுமாயின் அவர்களுக்கு உண்மைகளை சொல்ல வேண்டும். உண்மையொன்றுதான் உலகத்தை விளங்கிக்கொள்ள ஒரேயொரு வழி.

# அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ‘துணிச்சல் பெண்’! விருது பெறும் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா




- அலசுவது **இராஜதந்திரி** -

ஐக்கிய அமெரிக்க இராஜாங்க அமைச்சு, சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 2007ஆம் ஆண்டு முதல், உலகில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொண்ட பெண்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்து வருகின்றது. இவ்வுயர் விருது அறிமுகமான நாளிலிருந்து இதுவரை 75 நாடுகளைச்சேர்ந்த 155 பெண்களுக்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்தடவை இந்த உயர் விருதுக்கு தெரிவான பல்வேறு நாடுகளையும் சேர்ந்த பதின்னான்கு பெண்மணிகளில் ஒருவராக யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகவும், மன்னாரை வதிவிடமாகவும் கொண்ட, மன்னாரின் புனித சவேரியர் கல்லூரி பழைய மாணவியான சட்டத்தரணி ரணிதா ஞானராஜாவும் தெரிவாகியுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பட்டதாரியான ரணிதா ஞானராஜா, மனித உரிமைகள் சார்ந்த சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு, வடக்கு-கிழக்கில் யுத்த அனர்த்தங்களினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களின் மனிதாபிமான பிரச்னைகளை துணிச்சலோடு அணுகிவருவதை கவனத்தில் எடுத்தே அமெரிக்க இராஜாங்க திணைக்களம் ரணிதாவுக்கு இந்த ஆண்டுக்கான துணிச்சலான பெண்மணிக்குரிய விருதை அறிவித்துள்ளது.

**மன்னார் மனித புதைகுளி**

ஓரிரு வருடங்களுக்கு முன்னர் மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியில் இருந்த எலும்புக்கூடுகளின் உண்மைத்தன்மையை தடயவியல் ஆதாரங்களைக்கொண்டு அறிந்துகொள்வதில் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா பெரும் பங்காற்றியிருந்தார். அத்துடன், அமெரிக்காவின் புளொரிடா மாநிலத்திலிலுள்ள தடயவியல் ஆய்வுகூடத்துக்கு மன்னாரில் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் மேலதிக ஆய்வுகளுக்காக ஒப்படைக்கப்பட்டபோது, ரணிதாவும் புளொரிடா ஆய்வுகூடத்துக்கு சென்று, நேரடியாகவே அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் விபரங்களை அறிந்திருந்தார்.

அரசியல் சார்பற்ற முறையில், சட்ட ரீதியாகவே தனது பணிகளை துணிச்சலோடு வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மனிதாபிமானப் பிரச்னை தொடர்பாக மேற்கொண்டதை கருத்தில் கொண்டே அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இந்த ஆண்டின் துணிச்சலான பெண்மணிகளில் ஒருவராக அவரைத் தேர்ந்தெடுத்துள்ளது.

**விருதுக்குரிய அறிக்கை**

அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், ரணிதா ஞானராஜா பற்றி குறிப்பிட்டுள்ளதாவது: ‘ஒரு சட்டத்தரணியான ரணிதா ஞானராஜா, தொடர்ச்சியாகவே ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக இலங்கையில் அரசதரப்பிலிருந்து வருகின்ற அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களுக்கு குரல் கொடுத்து வருகின்றார். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த மனிதாபிமான நடவடிக்கைகள், மற்றும் தமிழ் அரசியல் கைதிகள் சம்பந்தப்பட்ட பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழான சட்டப் பிரச்னைகளையும் துணிச்சலோடு கையாண்டு வருகின்றார்.

‘தமிழ் அரசியல் கைதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் சட்டத்தரணி ரணிதா ஞானராஜா தமது கட்டணங்களையும் அறவிடுவதில்லை. இலவசமாகவே தமது சேவைகளை மனிதாபிமான அடிப்படையில் வழங்கிவருகின்றார். அவரது சட்ட ரீதியான சேவைகளைக் கருத்தில்கொண்டே அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உயர் விருது வழங்கப்படுகின்றது.’

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் இந்த உயர் விருதை ரணிதா ஞானராஜா பெறுவதன்மூலம் அவர் பெறுகின்ற கௌரவம் ஒருபுறமிருக்க, இவ்விருதின்மூலம் இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரச்னை குறித்து சர்வதேச சமூகம் எவ்வளவுதூரம் அறிந்து வைத்துள்ளதென்பதையும் நன்கு அறிந்துகொள்ள முடியும். இலங்கையின் வடக்கு-கிழக்கைச் சேர்ந்த பெண்களில் பலர் பல்வேறு துறைகளிலும் சிறப்புற்று வருவதைக் காணமுடிகிறது.

இந்நிலையில், சட்டத்தரணி ரணிதா ஞானராஜாவுக்கு கிடைத்துள்ள இவ் விருது, இலங்கை தமிழ் பெண்களுக்கு சர்வதேச மகளிர் தினத்தில் கிடைத்த கௌரவமாகவும், அங்கீகாரமாகவுமே விளங்குகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் பாரியார் கலாநிதி ஜில் பைடன் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் இவ்வுயர் விருதை அவ்விருதுக்குரிய ரணிதா ஞானராஜா உட்பட பதினான்கு பெண்மணிகளுக்கும் காணொளி வாயிலாக நாளை திங்கட்கிழமை வழங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைப்பதில் இடையூறுகள் ஏற்படலாம். பொறுமை தேவை. வார்த்தைகளை கவனித்துப் பயன்படுத்துங்கள். புகழ் பெற்றவர்களிடம் அதிக உரிமை எடுக்க வேண்டாம்.

**இடபம்**
மனதில் சிறு குறைகள் ஏற்பட்டுப் பிறகு தீரும். ஓரளவு முன்னேற்றம் உண்டாகும். பிள்ளைகள் பற்றிய கவலை நீங்கும். பெரிய மனிதர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிட்டும்.

**மிதுனம்**
எதையும் ஈடுபாட்டோடு செய்தால்தான் வெற்றி வரும். எதிர்பாலினத்தினருடன் பேசும்போது நிதானம் தேவை. முன்பு செய்த முயற்சியால் திடீர் பணவரவு உண்டாகும்.

**கடகம்**
எந்த ஒரு விஷயத்தையும் துணிச்சலோடு செய்வீர்கள். பெரியவர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள். அழகுணர்ச்சி கூடும். பிள்ளைகளின் நடத்தையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**சிம்மம்**
கலைத்திறன்கள் கூடும். புதிய செயல்பாடுகளில் ஈடுபடுவீர்கள். புதிய நண்பர்கள் பற்றிய பயமும் சந்தேகமும் நீங்கி நிம்மதி வரும். பணியிடத்தில் மேலதிகாரியால் இருந்த தொல்லை குறையும்.

**கன்னி**
வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். பொறுப்பு அதிகரிக்கும். பிள்ளைகள் பெருமை சேர்க்கும்படி நடந்து கொள்வார்கள். எதிர்பார்த்த நன்மை கிடைக்கப்பெற்று மகிழ்ச்சி அடைவீர்கள்.

**துலாம்**
பணியிடத்தில் கிடைக்கும் பாராட்டால் குதூகலம் வரும். ஆடம்பர பொருட்களை வாங்கும் விருப்பத்தை ஒத்திப்போடுவீர்கள். அழகுப் பொருள் வாங்குவீர்கள். பழைய கடன் வசூலாகும்.

**விருட்சிகம்**
பிள்ளைகளால் உண்டான மனஉளைச்சல் அவர்களாலேயே தீரும். வருமானம் பற்றி இத்தனை நாள் இருந்த பயம் நீங்கும். பெரிய மனிதர்களின் சந்திப்பு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்.

**தனுசு**
உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். கடன் பிரச்னை குறையும். உறவினர் மீது இருந்த கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். புதிய முயற்சிகள் செய்ய தடைகள் நீங்கி வழிகிடைக்கும்.

**மகரம்**
சிறு மன உளைச்சல் மனைவியால் தீரும். நிம்மதி வரும். வாழ்க்கைத்துணையுடன் உல்லாசப் பயணங்களை மேற்கொள்வீர்கள். தாமதங்கள் இருக்கும். பழைய திட்டம் ஒன்று நிறைவேறும்.

**கும்பம்**
சிறு விஷயங்களில் இத்தனை நாள் இல்லாத தடை வரும். வீண்பழி வராமல் மிக கவனமாகச் செயல்பட வேண்டும். மற்றவர் விஷயங்களில் தலையிடாமல் இருப்பது நல்லது.

**மீனம்**
ஆரோக்யத்திலும் பேச்சிலும் கவனம் அவசியம் தேவை. குழந்தைளிடமிருந்து சந்தோஷ செய்தி ஒன்று வரும். ஒன்றிற்கு மேற்பட்ட இனங்களில் அதிக வருமானம் வரும்.

# நீர்ப்பாசன செழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் 138 குளங்களை மறுசீரமைக்க நடவடிக்கை!

*மன்னார், மார்ச் 07*

ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச அவர்களின் சௌபாக்கிய கொள்கையின் கீழ் நாடாளவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் 'நீர்ப்பாசன செழிப்பு' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய விவசாயக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் நேற்றுக் காலை மன்னார் மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.



மன்னார் மாவட்டத்தில் சுமார் 138 குளங்களை மறுசீரமைப்பு செய்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற் கமைய மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள தாராபுரம் கோரைக் குளம் மறுசீரமைப்புப் பணி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் இந்த அபிவிருத்திப் பணிகளை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல், மற்றும் அதிகாரிகள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

தாராபுரம் கோரைக்குளம் மறுசீரமைப்புப் பணிகளுக்காக சுமார் 44 இலட்சத்து 50 அயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# நாடு முழுவதும் குற்றங்களை ஒழிக்க விசேட நடவடிக்கை

*கொழும்பு, மார்ச் 07*

நாடு முழுவதும் குற்றங்களை ஒழிக்கும் விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வியாபாரம் மற்றும் கப்பம் கோருதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களை தடுக்கும் வகையில் இந்த நடவக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் ஒரு வாரத்துக்கு பொலிஸ்விசேட அதிரடிப்படையினரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.



# மொனராகலை ஆடை தொழிற்சாலை நேற்று பிரதமரினால் திறந்துவைப்பு

*கொழும்பு, மார்ச் 07*

மொனராகலை ஆடை தொழிற்சாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று சனிக்கிழமை முற்பகல் திறந்து வைக்கப்பட்டது.

500 மில்லியன் ரூபா முதலீட்டில், டீ.ஏ.ஜீ. அப்பரல் (பிரைவட்) லிமிடட் புதிய ஆடை தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது.

இதன்மூலம் 600 நேரடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் சுமார் 3000 பேர் வரை மறைமுக நன்மைகளை அனுபவிப்பர். இப்புதிய ஆடை தொழிற்சாலை ஊடாக ஆடை ஏற்றுமதியில் ஆண்டிற்கு 3.5 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாவை வெட்டி புதிய ஆடை தொழிற்சாலையை வைபவரீதியாக திறந்து வைத்த பிரதமர், அங்கு உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெறும் முறை குறித்தும் கண்காணித்தார்.

# தொற்றுநோய் சிகிச்சைகளுக்காக புதிதாக ஐந்து வைத்தியசாலைகள்

*கொழும்பு, மார்ச் 07*

தொற்று நோய்களுக்கான சிகிச்சைகளை வழங்குவதற்காக 05 வைத்தியசாலைகளை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யம்பாந்தோட்டை, கிளிநொச்சி, அம்பாறை, இரணவில மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் இந்த வைத்தியசாலைகள் அமைக்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

இதற்கமைய, கிளிநொச்சி, அம்பாறை மற்றும் கண்டி ஆகிய இடங்களில் தலா 400 கட்டில்களை கொண்ட வைத்தியசாலைகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், அம்பாந்தோட்டை மற்றும் இரணவில ஆகிய இடங்களில் தலா 200 கட்டில்களை கொண்ட வகையில் வைத்தியசாலைகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், ஐ.டி.எச். வைத்தியசாலையில் தொற்று நோய்களினால் பீடிக்கப்பட்டவர்களுக்காக சமூக இடைவெளியுடன் கூடிய பிரிவொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 120 கட்டில்களை கொண்ட வகையில் இந்த பிரிவு ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் இந்த அனைத்து வைத்தியசாலைகளும் அதிதீவிர சிகிச்சைப்பிரிவுடன் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# கூட்டணி குறித்த செய்திகளுக்கு ஐ.தே.க. - மக்கள் சக்தி மறுப்பு

*கொழும்பு, மார்ச் 07*

ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் வெளியாகிய செய்திகளை அந்தக் கட்சிகள் மறுத்துள்ளன.

இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட இந்த கூட்டணி அமையும் என செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியுடன் எவ்வித பேச்சும் இடம்பெறவில்லை என ஐ.தே.க.வின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார். இதற்கிடையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவும் இந் தச் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை எனக் கூறியுள்ளார்.

செய்தியின் பின்னணியில்.....

# அரசியலில் இரட்டை வேடம்



மாலி

கடந்த ஆட்சிக் காலத்தில் அரசுக்கு ஆதரவாக விருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு, மாகாண சபைத் தேர்தலை அந்த அரசு நடத்தாது காலங்கடத்திய போது, அதற்கு ஆதரவாக இருந்தது. ஆனால், எதிர்க் கட்சியில் இருந்த நாம் அத் தேர்தலை நடாத்த வற்புறுத்தினோம். இப்போது, எமது அரசு மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தவில்லை என்று, ஜெனிவாவில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் கூறுகிறார்கள். மகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் அவர்களின் இரட்டைவேடம் இதுவென்று, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறியிருக்கிறார்.

ஆக, தாமும் இரட்டை வேஷதாரிகள் என்பதைத்தான் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இதன்மூலம் சொல்கிறார். இந்த அரசாங்கத்தில் விசித்திரமாக அவதானிக்கப்படுகின்ற தொன்று, ஒரு விவகாரத்தில் அவருக்கு அதிகாரம் இருக்கிறதோ இல்லையோ, ஒவ்வொரு வரும் ஒரு விடயத்தில் அதிகார தோரணையில் ஒவ்வொன்று சொல்கிறார்கள். ஒருவர் நடக்கும் என்பார் இன்னொருவர் நடக்காது என்பார். அமைச்சரவைத் தீர்மானமாக ஒன்று அறிவிக்கப்பட்ட பின்னரும் சொல்வார்கள்.

எப்படியெனினும், தினேஷ் குண வர்த்தன சொன்னது உண்மைதான். நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு நல்லதொன்றைச் செய்து விடலாம்; செய்துவிட வேண்டும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உண்மையிலேயே நம்பினார் விரும்பினார். செல்வநாயகம் காலத்திலோ அல்லது அமிர்தலிங்கம் காலத்திலோ, இல்லாவிட்டால் பிரபா கரன் காலத்திலோகூட பெறாத ஒன்றைத் தன்னுடைய காலத்தில் பெற்றுவிட்ட தான ஒரு "மேற்கோளை"அவர் விரும்பி னார். எனினும், தன்னையும் விஞ்சவல்ல ஒருவரை தன்னுடைய வாரிசாக ஜே. ஆர் ஜயவர்த்தன அப்போதே தேர்ந்திருந்ததை, சம்பந்தனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இலங்கைத் தமிழர்களின் அரசியலில், நம்புவதும் ஏமாறுவதும்தான் வரலாறு. வரலாறாகும் பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம், சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் என்பன இந்த வரலாற்றைத்தான் சொல்கின்றன. 1976 தனிநாடு பிரகடனத்தின் பின்னரும், மாவட்ட அபிவிருத்தி சபைகளில் அமிர்தலிங்கம் நம்பியதும் ஏமாந்ததும், கூடவே இதில் அடக்கம். ("பழி ஒரிடம் பாவம் ஒரிடம்" - இதுதான் மாவட்ட அபிவிருத்தி சபைகள்.)

எனினும், நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழர்கள் நம்பி ஏமாறவில்லை நம்பிக் கெட்டார்கள். தமிழர்கள் தமது அரசியலை ஒற்றுமை முன்னணியாக முன்னெடுக்க தலைப்பட்டதில் 1972இல் தோற்றிய தமிழர் கூட்டணி, தனிநாடு பிரகடனத்துடன் 1976இல் தமிழர் விடுதலைக் கூட்டணியானது. சர்வதேச அரங்கில் இலங்கைத் தமிழர் விவகாரம் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியபோது அவர்களின் மிதவாத அரசியல் தலைமை யென்ற அங்கீகாரம் அதற்கிருந்தது. ஆனால், பின்னர் தோற்றுவிக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பால் அந்த ஸ்தானத்தை முற்றிலும் எட்டிவிட முடியவில்லை; எட்டிவிடவும் முடியாது. இதற்கு காரணங்கள் உண்டு. அவை, பெரும் புதிரானவையுமல்ல.

இப்போது, தமிழர் அரசியலில் மேலும் புதிதுபுதிதாக கூட்டணிகள் - முன்னணிகள் தோற்றியிருக்கின்றன ; தோற்றுகின்றன. உண்மையில் இவர்கள், நம்பிக் கெட்ட தமிழ் இனத்தின் நலனைவே கருதிய அர்ப்பணிப்புடன், தன்னலங் கருதாது - அந்த மக்களின் சுபீட்சத்துக்காகவே அரசியல் புரிபவர்களாகவிருந்தால் ஒரு கூட்டுத் தலைமையில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் புத்தெழுச்சி, அப் புத்துயிர்பை ஏற்படுத்தலாம்.

உடனேயே, ஆனந்தசங்கரியு டனா? என்ற கேள்வி, பரிகாசத்துடன் எக்காள மிடும். எல்லோருடைய கணக்கு வழக்கு கள் எல்லாவற்றையுமே சரியாக எழுதி, சரியாகவே கூட்டிக் கழித்துப் பார்த்தால், அப்போது இக் கேள்விக்கான சரியான பதில் தெரியும்.

உதய சூரியன் மேற்கில் உதிக்க வேண்டும் என்ற நினைப்பு எழலாம்தான். •

# தாக்குதலுக்கும் அரசுக்கும் எந்தப் பொறுப்பும் இல்லை

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 07

**ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான முழுப் பொறுப்பையும் கடந்த அரசாங்கமே ஏற்கவேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மிகவும் தெளிவானது எனக் கூறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தில் தேசிய பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த முக்கியத்துவத்தை கடந்த நல்லாட்சி அரசாங்கம் புறக்கணித்தமையின் ஊடாகவே இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், குறித்த தாக்குதலுக்கும் தற்போதைய அரசாங்கத்துக்கும் எந்தவித பொறுப்பும் இல்லை என குறிப்பிட்ட அவர், தாக்குதலுக்கு பின்னணியில் இருப்பவர்களை தண்டிப்பதே தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என கூறினார்.

# மைத்திரியை சிறைக்குள் தள்ளவேண்டும் என்றால் உண்மை சூத்திரதாரிகள் தூக்கிலிடப்படவேண்டும்

## சிறிலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 07

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறையில் அடைக்கப்படவேண்டுமானால் அந்தத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகள் தூக்கு மேடையில் பகிரங்கமாக ஏற்றப்பட வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எந்தவொரு ஊடகவியலாளரை அல்லது எதிரியைக் கொல்லாத ஒரே இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மாத்திரமே. அவர் எவரையும் காணாமல் ஆக்கவோ அல்லது எந்த அமைப்புக்கும் தீ வைக்கவோ அல்லது தன்னைக் கேலி செய்த எவருக்கும் பதிலடி கொடுக்கவோ இல்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் குண்டர்கள், போதைப்பொருள் விற்பனையாளர்கள், பாலியல் வல்லுறவாளர்கள், மோசடிக்காரர்கள் மற்றும் பயங்கரவாதிகளிடமிருந்து விடுவித்தவர் மைத்திரிபால சிறிசேனவே.

அதேபோல், பேராசிரியர் விஸ்வ வர்ணபால, பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாச மற்றும் கலாநிதி சுரேன் ராகவன் போன்றவர்களைத் தலைமைப் பதவிகளுக்கு நியமித்தவரும் அவரே" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசிலிருந்து வெளியேறும் தீர்மானம் இன்னும் இல்லை!

## மைத்திரிபால கருத்து



கொழும்பு, மார்ச் 07

"சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி இன்னமும் எடுக்கவில்லை" என முன்னாள் ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுஜன பெரமுன அரசு பல கட்சிகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டது. அதில் எமது சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரதான பங்காளிக் கட்சியாக இருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைய எமது கட்சி முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தது. அதேபோல், சிறிலங்கா பொதுஜன முன்னணி கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியடையவும் எமது கட்சியே பிரதான காரணம்.

ஆனால், அரசுக்குள் இருக்கும் சிலர் இதை மறந்து செயற்படுகின்றனர். அவர்கள் எங்களை வேண்டுமென்றே தூற்றுகின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, கடந்த காலங்களில் எத்தனையோ சவால்களைக் கடந்து வந்தது. எனவே, தற்போதைய விமர்சனங்களைக் கண்டு எமது கட்சி பலம் இழக்காது.

அரசிலிருந்து வெளியேறும் தீர்மானத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி இன்னமும் எடுக்கவில்லை. அரசுடன் இணைந்து பயணிக்கவே விரும்புகின்றோம். ஆனால், அரசுக்குள் இருக்கும் சில விஷக்கிருமிகளை அப்புறப்படுத்த வேண்டும் என்பது எமது பணிவான கோரிக்கை - என்றார்.

(அ)

# வரலாற்று சந்தர்ப்பத்தை தமிழர் தவறவிடக்கூடாது

## வடக்கு-கிழக்கு பல்கலை மாணவர்கள் அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 07

வரலாற்று சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் என்று யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் அறைகூவல் விடுத்துள்ளனர்.

"இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு உரிய போராட்டங்களை மேற்கொள்வதற்கான வரலாற்றுச் சந்தர்ப்பம் ஒன்று புலம்பெயர் தமிழ் மக்களுக்கும் தாயக மக்களுக்கும் கிடைத்திருக்கின்றது.

அந்த சந்தர்ப்பத்தை தவற விடாமல் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த அழுத்தம் கொடுக்க போராட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்" என்றும் வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர்.

(அ)

# கொழும்பு மேற்கு முனையம் பற்றிய இலங்கையின் அறிக்கை தவறானது!

## அவர்களிடமே சொல்லிவிட்டோம் என்கிறது இந்தியா

புதுடில்லி, மார்ச் 07

**கொழும்பு துறைமுக மேற்கு கொள்கலன் முனையம் குறித்த முன்மொழிவுக்கு இந்திய தூதரகம் அனுமதி அளித்துள்ளது என்ற இலங்கை அரசாங்கத்தின் கூற்று 'உண்மையில் தவறானது' என்று இந்திய வெளிவிவகார அமைச்சு கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது.**

புதுடில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இணையவழி ஊடக சந்திப்பில், வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அனுரக் சிறிவஸ்தவா இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து, இந்திய தூதரகம், இலங்கை அரசாங்கத்திற்கு அறியப்படுத்தியுள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு கொள்கலன் முனையம் தொடர்பில், அதானி துறைமுக நிறுவனத்திற்கும், விசேட பொருளாதார வலய நிறுவனத்திற்கும் முன்வைக்கப்பட்ட யோசனை, இந்திய தூதரகத்தினால் அனுமதிக்கப்பட்டதாக இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கொழும்பு துறைமுக மேற்கு முனையத்தை, இந்தியாவுடனும், ஜப்பானுடனும், இணைந்து அபிவிருத்தி செய்ய, அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோது, இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

"கொழும்பில் உள்ள எங்கள் தூதரகத்தின் ஒப்புதல் தொடர்பான அவர்களின் ஊடக வெளியீடு உண்மையில் தவறானது என்றும் இலங்கை அரசாங்கத்திற்கு கொழும்பில் உள்ள தூதரகம் தெரிவித்திருக்கிறது," என்று சிறிவஸ்தவா கூறினார்.

"இந்த திட்டத்தில் இலங்கை அரசு முதலீட்டாளர்களுடன் நேரடியாக ஈடுபட்டுள்ளது என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம்," என்று அவர் மேலும் கூறினார்.

இதன்போது, குறித்த திட்டம் தொடர்பில், இந்திய அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதா?, அது ஏற்றுக்கொள்ளப்பட்டதா? என்றும் இந்திய ஊடகவியலாளர் ஒருவர் வினவியுள்ளார்.

அத்துடன், தொழிற்சங்க எதிர்ப்பு காரணமாக, அந்தத் திட்டத்தை இரத்துச் செய்யும் நிலைமையை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்றும் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் அனுரக் சிறிவஸ்தவா, அது இந்திய அரசாங்கத்தின் கொடுக்கல் வாங்கல் அல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# 10ஆம் திகதி மௌனத்தை கலைப்பாரா மைத்திரி?

கொழும்பு, மார்ச் 07



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இன்னும் தனது நிலைப்பாட்டை விளக்கவில்லை. எதிர்வரும் 10 ஆம் திகதி அவர் மௌனத்தை கலைப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

மேற்படி அறிக்கையை சிறிலங்கா சுதந்திரக்கட்சி நிராகரித்திருந்தாலும், அறிக்கை தொடர்பில் கருத்து வெளியிடுவதை மைத்திரிபால சிறிசேன தவிர்த்தே வருகின்றார்.

ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதலை தடுப்பதற்கு தவறியமை, கடமையை நிறைவேற்றத் தவறியமை மற்றும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்கு எதிராக குற்றவியல் வழக்குகளை தாக்கல் செய்வது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் ஆராய வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பொறுப்புக் கூறவேண்டிய அரசியல்வாதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டபோது பாதுகாப்பு அமைச்சராகவும் முப்படைகளின் தளபதியாகவும் இருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அடங்குகின்றார்.

இதனால் அறிக்கை தொடர்பில் மைத்திரி தனது சட்டத்தரணிகளுடன் கடந்த நாட்களில் ஆலோசனை நடத்தினார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கைமீது எதிர்வரும் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதம் ஆரம்பமாகின்றது. இதன்போது மைத்திரி தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவார் எனவும், குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிப்பார் எனவும் அறியமுடிகின்றது.

பாராளுமன்ற உறுப்பினருக்கான சிறப்புரிமையை பயன்படுத்தி சில தகவல்களை அவர் வெளியிடக்கூடும் எனவும் தெரியவருகின்றது.



## புதிய அரசமைப்பு உருவாக்கம்

# தெரிவுக்குழுவை அமைக்க கோருகின்றது சஜித் அணி

கொழும்பு, மார்ச் 07

புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான நிபுணர்குழு என்பது கண்துடைப்பு நாடகம். எனவே, இவ்விவகாரத்தைக் கையாள்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை அமைக்குமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்லவே அரசிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

புதிய அரசமைப்பு தொடர்பில் யோசனைகளை முன்வைக்குமாறு அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருநதது. இவ்விவகாரத்தைக் கையாளும் நிபுணர்கள் குழுவில் அரசுக்கு சார்பான சட்டத்தரணிகளே இடம்பெற்றுள்ளனர். இப்படியான குழுவின் முன்னால் யோசனை முன்வைத்து தமது தரப்புக்கு பழக்கமில்லை என்று எமது சட்டத்தரணிகள் தெளிவாக எடுத்துரைத்தனர்.

ஒன்று, பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் முழு பாராளுமன்றத்தையும் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றி அதன் ஊடாக புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். பல தரப்பு கலந்துரையாடல்களை நடத்தி, உரிய தீர்வை எட்டுவதற்கு இதுவே பொருத்தமான களமாக அமையும்.

அதேவேளை, 13 ஆவது திருத்தச்சட்டம் குறித்து அரச தரப்புக்குள் ஒருமித்த நிலைப்பாடு இல்லை என நிபுணர்கள் குழுவினால், எமது சட்டத்தரணிகள் குழாமுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்பமே குழப்பமாகவும், அரசுக்குள் முரண்பாடும் உருவாகியுள்ளது. இந்நிலையில் எப்படி நாம் யோசனைகளை முன்வைப்பது. இது கண்துடைப்பு நாடகமாகும்.

தேர்தலை நடத்தினால் அரசுக்கு தோல்வி உறுதி. எனவே, புதிய அரசியலமைப்பை காரணம்காட்டி தேர்தலை இழுத்தடிப்பதே அரசின் நோக்கம் - என்றார்.

(அ)

# இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி நேற்று யாழ்ப்பாணத்தில் உதயம்

## இந்தியாவுடன் தொடர்பு இல்லை என தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 07




இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி எனும் பெயரில் நேற்று யாழ்ப்பாணத்தில் புதிய கட்சி ஒன்று உதயமாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு கட்சியின் தலைவர் வி.முத்துசாமியினால் வெளியிடப்பட்டது.

இதன்போது அந்தக் கட்சியின் தலைவர் தெரிவிக்கையில்-

இலங்கை பாரதிய ஜனதாக்கட்சி என்ற புதிய அரசியல் கட்சி ஒன்றை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இந்தக் கட்சி அரசியலை முன்னிலைப்படுத்தாது. அரசியலுக்கு தமிழ் பேசும் மக்களை தயார்ப்படுத்தும் அல்லது பக்குவப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கும்.

கட்சியின் தலைவராக வர்த்தகர் வி.முத்துசாமியும், செயலாளராக ஊடகவியலாளர் எம்.இந்திரஜித்தும் மற்றும் நிதிச் செயலாளராக வர்த்தகத் துறையை சேர்ந்த வீ.திலான் ஆகியோரும் செயற்படுவார்கள்.

இலங்கை பாரதிய ஜனதாக் கட்சி, ஆங்கிலத்தில் சிறிலங்கா பாரதிய ஜனதா பார்ட்டி என்றும் சிங்களத்தில் சிறிலங்கா பாரதிய ஜனதா பக்சய என்று அழைக்கப்படும்.

இக்கட்சி மக்களுக்கு வசதி வாய்ப்புக்களான வாக்குறுதிகளை வழங்காமல் தமிழ் மக்களுக்கான கல்வி, ஆங்கிலக் கல்வி, வருமான ஊக்குவிப்பு, விளையாட்டு மற்றும் கலாசார மேம்பாட்டுத் திட்டங்களில் செயற்படவுள்ளது.

இலங்கை பாரதிய ஜனதாக் கட்சியின் சேவை ஒரு மதத்துக்கான சேவையாக இருக்காது. அனைத்து இனங்களிலும் புறந்தள்ளப்பட்டவர்களை சமூகத்தில் உயர்த்தும் கட்சியாக செயற்படும். எனவே அனைத்து சமூகத்தவர்களும் இந்தக் கட்சியில் இணைந்து செயற்படுவார்கள் - என்றார்.

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு உலர் உணவுப் பொதிகள் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 07

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள வசதி குறைந்த பெண் தலைமைத்துவ மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலர் உணவு பொதி வழங்கும் நிகழ்வு நேற்று சுன்னாகத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியின் நெறிப்படுத்தலில் பலாலி கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டத்தில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் ஆயிரம் பேருக்கு நேற்று உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினரால் பல்வேறுபட்ட சமூக நல நோன்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா மற்றும் யாழ்.மாவட்ட ராணுவ உயரதிகாரிகள்,பலாலி கட்டளைத் தலைமையாக உயர் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# இராணுவத்தினரை நாங்கள் காட்டிக்கொடுக்கமாட்டோம்!

## காமினி லொக்குகே திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 07

**நாட்டுக்கு எதிராக எத்தனை பிரேரணைகள் கொண்டு வந்தாலும் ஒருபோதும் இராணுவத்தினரை காட்டிக்கொடுக்க மாட்டோம் என போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.**


இராணுவத்தினரை பாதுகாக்க விசேட பொறிமுறை ஒன்று சட்டத்தின் ஊடாக வகுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச போக்குவரத்து தினத்தை முன்னிட்டு கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏப்ரல் 21குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை குறித்து மாறுப்பட்ட பல கருத்துக்கள் தோற்றம் பெற்றுள்ளன. நாட்டு மக்கள் குறிப்பாக கத்தோலிக்க மக்கள் அறிக்கை தொடர்பில் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

முழுமையற்ற அறிக்கையை ஆணைக்குழுவினர் சமர்ப்பித்துள்ளார்கள் என்பதை ஆளும்



தரப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை தொடர்பான பொறுப்பை அரசாங்கத்தால் ஏற்கமுடியாது.

கடந்த அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குவில் ஏதேனும் மாற்றம் ஏற்படுத்த ஜனாதிபதி முனைந்தபோது அதற்கு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இடமளிக்கவில்லை. ஆணைக்குழுவில் மாற்றம் ஏற்படுத்தாமல் துரித அறிக்கையை கோரினார்கள். சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றன.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணை அறிக்கை நிறுத்தப்படவில்லை. விசாரணை நடவடிக்கைள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. ஆகவே, ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் குறித்து நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றும்.

அத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் முழுமையாக நிராகரித்துள்ளது-என்றார்.



# பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று விபத்தில் மரணம்!

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, மார்ச் 07

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிகண்டியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சி-பரந்தன் இடையே வயல்வெளிப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மேரி ஜாக்சன் அன்ரனி (வயது -30) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கிப் பயணித்தபோது மாடு ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார் என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மேலும் 300,000 டோஸ் சினோபோர்ம் தடுப்பூசி இனாமாக வழங்க சீனா இணக்கம்

கொழும்பு, மார்ச் 07

மேலும் 300,000 டோஸ் சினோபோர்ம் கொரோனா தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்க சீனா உறுதியளித்துள்ளது.

ஏற்கனவே 300,000 தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்குவதற்கு தயாராக இருப்பதாக சீனா உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தது.

எவ்வாறாயினும், இலங்கையில் அவசரகால பயன்பாட்டுக்காக இந்த தடுப்பூசிக்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

கடந்த 3 ஆம் திகதி சீனாவின் பிரதி வெளிவிவகார அமைச்ச



ருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது , 600,000 கொரோனா தடுப்பூசியை வழங்க சீனா உறுதியளித்திருந்தது என சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் குறிப்பிட்டார்.

சீனா உருவாகியுள்ள சினோபோர்ம் தடுப்பூசிகளை அவசர கால பயன்பாட்டுக்கு பயன்படுத்த 56 நாடுகளில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் சினோபோர்ம் தயாரிப்பாளரிடமிருந்து மேலும் சில விவரங்களுக்காக காத்திருப்பதனால் இலங்கையில் இந்த தடுப்பூசிக்கு அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் ஒரு வார காலத்திற்குள் இந்தப் பிரச் னைக்கு தீர்வு காண முடியும் என பதில் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமண தெரிவித்தார்.

# துப்பாக்கியுடன் இளைஞன் வவுனியாவில் கைதானார்!

வவுனியா, மார்ச் 07

வவுனியாவில் சட்டவிரோத துப்பாக்கியுடன் இளைஞன் ஒருவரை விஷேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

புளியங்குளம் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்திலேயே வவுனியா-பாலமோட்டை வயல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற இளைஞரிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபரிடம் இருந்து சட்டவிரோத துப்பாக்கி (இடியன் துப்பாக்கி) கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை கைது செய்த விசேட அதிரடிப் படையினர் அவரை ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாலமோட்டை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஓமந்தை பொலிஸார் மேலும் கூறினர்.

# ராவணா நீர்வீழ்ச்சி வனப்பகுதியில் தீ!

கொழும்பு, மார்ச் 07

எல்ல ராவணா நீர்வீழ்ச்சி வனப்பகுதியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இரவு முதல் எழுந்த தீ விபத்தால் 15 ஏக்கருக்கும் மேற்பட்ட வனப்பகுதி அழிந்துள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது. தீயை அணைக்க விமானப் படை ஹெலி பணிக்கு அமர்த்தப்பட்டது.

மேலும் தீயணைப்பு நடவடிக்கைக்கு அப்பகுதியில் உள்ள பொலிஸாரும் குடியிருப்பாளர்களும் உதவி வழங்கினர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை வெளியிடப்படவில்லை.

# ரனிதா ஞானராஜாவுக்கு அமெரிக்காவின் துணிச்சல்மிக்க சர்வதேசப் பெண் விருது!

கொழும்பு, மார்ச் 07

அமெரிக்க இராஜாங்க செயலாளரினால் வழங்கப்படும் துணிச்சலான சர்வதேச பெண்கள் (International Women of Courage) விருதுக்கு, மனித உரிமை செயற்பாட்டாளரான சட்டத்தரணி ரனிதா ஞானராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த விருது வழங்கும் விழா எதிர்வரும் 8ஆம் திகதி காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெறவுள்ளது.

ரனிதா ஞானராஜா, அச்சுறுத்தல் மற்றும் சவால்களுக்கு மத்தியில் நாட்டில் ஒடுக்கப்பட்ட மற்றும் பாதிப்புகளை எதிர்நோக்கும் சமூகங்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடியவர் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், நீண்ட காலமாக பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு இலவச சட்ட உதவியை ரனிதா வழங்கியுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுடனும் அவர்களது குடும்பத்தினருடனும் பணியாற்றிய தனது விரிவான அனுபவத்தின் அடிப்படையில், இலங்கையின் மிகவும் நலிவுற்ற மக்களுக்கு நீதியையும் பொறுப்புக்கூறலையும் பெற்றுக்கொடுப்பதில் ரனிதா அர்ப்பணிப்புடன்




செயற்பட்டுள்ளார்.

உலகெங்கும் உள்ள பெண்களின் தைரியத்தையும் தலைமைத்துவத்தையும் அமைதிக்கான வாதிடலையும் அங்கீகரித்து, நீதி, மனித உரிமைகள், பால்நிலை சமத்துவம், பெண்களை வலுவூட்டல் போன்றவற்றுக்காக தனிப்பட்ட ரீதியில் அபாயத்தையும் பொருட்படுத்தாமல் பணியாற்றியமைக்காக, அவர்களை கௌரவப்படுத்தும் விதமாக இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

15ஆவது ஆண்டாக இந்த விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதுவரை 75 நாடுகளை சேர்ந்த 155 பெண்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.





நவீன்சிங் கட்கா
சுற்றுச்சூழல் செய்தியாளர், பி.பி.சி.

# கண்ணுக்குத் தெரியாமல் மிரட்டும் இமயமலையின் பெரிய ஆபத்துகள்

இமயமலையில் பனிப்பாறைகள் உருகுவது பனிப்பாறை ஏரிகளின் அளவை ஆபத்தான முறையில் அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், அவை கண்காணிக்கப்படாத பிற ஆபத்துகளையும் ஏற்படுத்துகின்றன என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

இரு துருவங்களை கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்றால், இமயமலைப்பகுதியில்தான் உலகிலேயே மிக அதிகமான பனிப்பாறைகள் இருக்கின்றன. புவி வெப்பமடைதலால் மில்லியன் கணக்கான டன் பனி இங்கு உருகியுள்ளது. இதுபோன்ற ஆபத்துகள் குறித்து நாம் எவ்வளவு தூரம் அறியாமையில் இருக்கிறோம் என்பதற்கு உத்தராகண்ட் மாநிலத்தின் சாமோலியில் அண்மையில் ஏற்பட்ட பேரழிவு மிகச் சமீபத்திய எடுத்துக்காட்டு என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.

“இத்தகைய ஆபத்துகளின் பின்னணியில் உண்மையில் என்ன நடக்கிறது என்பது பற்றி விரிவான புரிதல் நம்மிடம் இல்லை” என்று அமெரிக்காவின் மூத்த புவியியலாளரும் இமயமலை பேரழிவுகள் பற்றிய ஆராய்ச்சியாளரும், உத்தராகண்ட் பேரழிவு குறித்து ஆராய்ச்சி செய்துவருபவருமான ஜெப்ரி கார்ஜெல் கூறுகிறார்.

உத்தராகண்ட் நிகழ்வுகள் போன்றவை நடக்கும்போது நாம் செயலில் இறங்குகிறோம். ஆனால் பனிப்பாறைகள் உருகுவதன் மூலமாக ஏற்படக்கூடிய இதுபோன்ற ஆபத்துக்களை நாம் கண்காணிப்பதில்லை.” என்று அவர் மேலும் கூறுகிறார்.

**பனிப்பாறைகள் உருகுவதால் ஏற்படும் ஆபத்து**

பனிப்பாறைகள் உருகும்போது அல்லது மெலிந்துபோகும்போது இவற்றில் பல ஆபத்தானதாக மாறிவிடும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். உதாரணமாக பனிப்பாறை உருகியபின் மீதமுள்ள பனி மலைகளின் செங்குத்தான கிடைமட்டத்தில் ஒட்டிக்கொண்டு இருந்து எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடும்.

மெல்லிய பனிப்பாறைகள் மலையின் கீழும் அதைச் சுற்றியுள்ள நிலத்திலும் சீர்குலைவை ஏற்படுத்தும் சாத்தியமும் உள்ளது. இது நிலச்சரிவு, பாறை வீழ்ச்சி, பனி வீழ்ச்சி போன்ற சம்பவங்களை ஏற்படுத்தும். முழு மலையின் சாய்வும் இடிந்து விழக்கூடும்.

இதுபோன்ற சம்பவங்கள் எங்கு நிகழக்கூடும், எந்த மனித குடியிருப்பு பகுதிகள் மற்றும் உள்கட்டமைப்பு, ஆபத்தை எதிர்கொள்ளக்கூடும் என்பது நமக்குத்தெரியவில்லை என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இமயமலையின் கடினமான புவியியல் அமைப்பு, கண்காணிப்பு பணிகளை மிகம் சவாலானதாக ஆக்குகிறது.

“இமயமலை மற்றும் இந்துகுஷ் வட்டாரத்தில் 50,000 க்கும் மேற்பட்ட பனிப்பாறைகள் உள்ளன. அவற்றில் 30 மட்டுமே உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு, கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன,” என்று இந்தூரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் பனிப்பாறை நிபுணர் முஹம்மது பாரூக் ஆசாம் தெரிவிக்கிறார்.

“இவற்றில் 15 ஆய்வுகள் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. பனிப்பாறைகளை நாம் இன்னும் நெருக்கமாக ஆராய வேண்டும், ஏனென்றால் பல காரணிகளின் பங்கு மிக முக்கியமானது. ''என்கிறார் அவர்.

**நிலநடுக்கம் மற்றும் காலநிலை**

உலகின் இளம் மலைத்தொடரான இமயமலை தொடர்ந்து உயர்ந்து வருவதாகவும், நிலநடுக்கங்கள் பெரும்பாலும் மலை சரிவுகளை ஒழுங்கற்றதாக ஆக்குகின்றன என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

காலநிலை மாற்றம் காரணமாக பனிப்பொழிவு மற்றும் மழை பொழிவில் ஏற்படும் மாற்றங்கள், மலைகளை மேலும் பாதிப்பு ஏற்படக்கூடியதாக ஆக்குகின்றன என்று அவர்கள் மேலும் கூறுகின்றனர். புவி வெப்பமடைதலால் பனிப்பாறைகளில் ஏற்படும் மாற்றங்கள் நிலைமையை மோசமாக்குகின்றன என்றும் விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

2016 ஆம் ஆண்டில், திபெத்தின் அரு மலையில் ஒரு பனிப்பாறை திடீரென இடிந்து விழுந்தது. இதனால் மிகப்பெரிய பனிச்சரிவு ஏற்பட்டதில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கான கால்நடைகளும் இறந்துபோயின.

சில மாதங்களுக்குப் பிறகு அதே மலையில் மற்றொரு பனிப்பாறை எதிர்பாராத விதமாக சரிந்தது.

2012 ஆம் ஆண்டில், காஷ்மீரின் சியாச்சினில் ஏற்பட்ட பனிப்பாறை சரிவு விபத்தில் சுமார் 140 பேர் இறந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தான் வீரர்கள்.

**குறைவான பனிப்பாறைகள், அதிக நிலச்சரிவுகள்**

1999 முதல் 2018 வரை நிலச்சரிவுகள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் பனிப்பாறைகள் உருகுவதே என்று மேற்கு இமயமலை, கிழக்கு பாமிர், காரகோரம் மற்றும் இந்து குஷ் மலைத்தொடரின் தெற்கு பகுதி உள்ளிட்ட ஆசியாவின் மிக உயர்ந்த மலைப் பிரதேசங்கள் குறித்த சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.

சீன அறிவியல் அகாடமி விஞ்ஞானிகள் அமெரிக்க புவியியல் ஆய்வு செயற்கைக் கோள் படங்களை ஆய்வு செய்தபோது, 2009 மற்றும் 2018 க்கு இடையில் 127 நிலச்சரிவுகள் ஏற்பட்டிருப்பதைக் கண்டறிந்தனர்.

“நிலச்சரிவுகள் ஏற்படும் பகுதிகள் மற்றும் அதன் எண்ணிக்கையில் மாற்றங்கள் தெரிவதை எங்கள் முடிவுகள் காட்டுகின்றன. இது கடந்த தசாப்தத்தில் பெரிய நிலச்சரிவுகளின் அதிகரித்துவரும் போக்கைக் காட்டுகிறது. பனிப்பாறைகள் குறைவதற்கும், நிலச்சரிவுகள் அதிகரிப்பதற்கும் நேரடித் தொடர்பு உண்டு,” என்று ஜனவரி மாத ‘நேச்சர்’ சஞ்சிகையில் வெளியான ஆய்வுக் கட்டுரை தெரிவிக்கிறது.

டாலியா கிரஷ்பாம், நாசாவின் நீர்நிலை அறிவியல் ஆய்வகத்திற்கு தலைமை வகிக்கிறார். அவர் ஒரு நிலச்சரிவு நிபுணரும் ஆவார். “பனிப்பாறைகள் உருகுவதோடு தொடர்புடைய ஆபத்துகள் வெளிப்படையாக தெரியத்தொடங்கியுள்ளன,” என்று அவர் கூறுகிறார்.

“முன்னர் பனிப்பாறைகள் காரண மாக, மலைச்சரிவுகளில் இருக்கும் பாறைகள் ஒட்டிக்கொண்டிருந்தன. ஆனால் இப்போது பனிப்பாறை இல்லையென்றால், அவை அந்தரத்தில் நிற்கின்றன. இதனால் ஆபத்து ஏற்படக்கூடும்,” என்று அவர் குறிப்பிடுகிறார்.

2018 ஆம் ஆண்டில், காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச அரசுகளின் குழுவின் (ஐபிசிசி) கிரையோஸ்பியர் குறித்த சிறப்பு அறிக்கை, “பனிப்பாறைகள் உருகுவதும் பெர்மா ஃப்ராஸ்ட்( நிரந்தரமாக உறைந்த நிலையில் இருக்கும் மண்படிவம்) உருகுவது போன்றவை மலைச்சரிவுகளின் நிலைத்தன்மை மற்றும் அடிப்படையை பலவீனமாக்கியுள்ளது ,”என்று தெரிவிக்கிறது.

மலைகளின் பனிப்பாறைகள், கண்டப் பனிக்கட்டிகள், பனி மற்றும் பனி மூடிய பகுதிகள் மற்றும் கடல் பனி போன்ற உறைந்த நிலையில் தண்ணீரைக் கொண்டிருக்கும் புவிக்கோளின் பகுதிகளையே கிரையோஸ்பியர் என்று குறிப்பிடுகிறார்கள்.

**பனிப்பாறை ஏரிகள் மீது கவனம்**

பனிப்பாறைகளின் விரைவான உருகுவது மற்றும் பனிப்பாறை ஏரிகள் ஆபத்தான முறையில் நிரம்புவதால் ஏற்படும் உடைப்பு ஆகியவை பற்றி, இமயமலை பனிப்பாறைகள் குறித்த வரையறுக்கப்பட்ட ஆய்வுகள் கவனம் செலுத்துகின்றன. அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக பனிப்பாறைகள் மறைவது துரிதப்படுத்தப்பட்டால், இப்பகுதியில் பனிப்பாறையால் நிரம்பும் ஆறுகளுக்கு என்ன நேரிடும் என்பதையும் சில ஆய்வுகள் கவனித்துள்ளன.

பனிப்பாறை ஏரிகள் முழு கவனத்தையும் ஈர்த்துள்ளன, அதே நேரத்தில் வேகமாக உருகும் பனிப்பாறைகளுடன் தொடர்புடைய பிற ஆபத்துகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்று விமர்சகர்கள் கருதுகின்றனர்.

உட்டா பல்கலைக்கழகத்தில் புவியியல் பேராசிரியர் சமர் ரூபர், “இது குறைவான கவனத்தைப் பெற்றுள்ளது” என்று கூறுகிறார். உளவு செயற்கைக்கோள் படங்கள் வாயிலாக இமயமலையின் பனிப்பாறைகளில் ஏற்படும் மாற்றங்களை இவர் ஆய்வு செய்துள்ளார். “பனிச்சரிவு மற்றும் பனிப்பொழிவு போன்ற பேரழிவுகள் அரிதாக இருந்ததும், பனிப்பாறை தொடர்பான ஆபத்துக்கள் அவ்வளவு அதிகமாக இல்லாததும் இதற்குக் காரணமாக இருக்கக்கூடும்” என்கிறார் அவர்.

பனிப்பாறை ஏரி தொடர்பான வெள்ளம், வரலாற்று ரீதியாக இப்பகுதியில் அதிக பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது என்று பல ஆண்டுகளாக இமயமலைப் பகுதியில் பணியாற்றி வரும் ஒருங்கிணைந்த மலை மேம்பாட்டுக்கான சர்வதேச மையத்தின் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

“பனிப்பாறையிலிருந்து வெகு தொலைவில் வாழும் எச்சரிக்கை உணர்வு இல்லாத மக்களை இந்த வெள்ளம் பாதிக்கக்கூடும் என்பதால் இது இந்த குறிப்பிட்ட பேரழிவை மிகவும் ஆபத்தானதாக ஆக்குகிறது,” என்று மையத்தின் கிரையோஸ்பியர் முன்முயற்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் மிரியம் ஜாக்சன் கூறினார்.

**உறைந்த பனிப்பாறை பற்றிய ஆய்வு**

இந்திய அரசு நிறுவனங்கள் எச்சரிக்கைகள் குறித்து போதுமான கவனம் செலுத்தவில்லை என்று விமர்சிக்கப்பட்டுள்ளது.

மூத்த பனிப்பாறை நிபுணரான டாக்டர் டி.பி. டோபல், அறிவியல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வாடியா, இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹிமாலயன் ஜியாலஜி அமைப்பிலிருந்து ஓய்வு பெற்றவர். அவர் கூறுகிறார்: “நாங்கள் 2009 இல் பனிப்பாறைகளைப் ஆய்வுசெய்ய ஒரு மையத்தைத் தொடங்கினோம். இதை இந்திய பனிப்பாறைகள் தேசிய மையமாக உருவாக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது.”

“இது நடக்கவேயில்லை. பனிப்பாறை குறித்த ஆய்வு இதன் காரணமாக பாதிக்கப்பட்டது. நாங்கள் பயிற்சியளித்த ஒரு டஜன் பனிப்பாறை வல்லுநர்களுக்கு வேலை போய்விட்டது,” என்று டோபல் கூறுகிறார். இந்திய அரசின் காலநிலை மாற்றம் தொடர்பான தேசிய செயல் திட்டத்தின் கீழ் , எட்டு தேசிய பணிகள் உள்ளன. அவற்றில் ஒன்று “இமயமலை சுற்றுச்சூழல் அமைப்பை பராமரிப்பது”.

அதன் நோக்கம் ‘இமயமலை சுற்றுச்சூழல் அமைப்பின் பனிப்பாறைகளைப் புரிந்துகொள்வதும், அவற்றின் தற்போதைய ஆரோக்கியத்தை மதிப்பிடுவதும், தரவுகளை உருவாக்குவதும், புதிய முறைகளைப் பின்பற்றுவதும்’ ஆகும்.

இமயமலை எல்லையை பகிர்ந்து கொள்ளும் அண்டை நாடுகளான சீனா மற்றும் பாகிஸ்தானுடனான பதற்றமும் இதற்கு ஒரு பெரிய தடையாக இருப்பதாக சில நிபுணர்கள் கூறுகிறார்கள்.

“இந்த நாடுகள் ஒன்றிணைய வேண்டும். எல்லைகளைத் தாண்டிய பனிப்பாறைகள் தொடர்பான தகவல்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போது தான் பனிப்பாறைகள் உருகுவது தொடர்புடைய ஆபத்துக்களை நாம் விரிவாகக் கண்காணிக்கவும், பேரழிவுகளைச் சமாளிக்க நம்மை தயார்படுத்திக்கொள்ளவும் முடியும்,” என்று கடல் மற்றும் கிரையோஸ்பியர் குறித்த ஐபிசிசியின் சிறப்பு அறிக்கையின் முதன்மை ஒருங்கிணைப்பு எழுத்தாளர் அஞ்சல் பிரகாஷ் தெரிவிக்கிறார்.





இம்ரான் குரேஷி
பி.பி.சிக்காக

# தென்னிந்தியாவில் அதிக கவனம் செலுத்தும் ராகுல்!

கடந்த சில மாதங்களாக காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ராகுல் காந்தியின் வருகை, தென்னிந்தியாவில் அதிகமாகவே இருந்தது. சமீபத்தில் கேரளாவில் மீனவர்களோடு படகில் கடலுக்குச் சென்றவர் அரபிக் கடலில் குதித்து அனாயாசமாக நீச்சலடித்தார்.

தமிழகத்தில் மாணவி ஒருவர் விடுத்த சவாலை ஏற்றுக் கொண்டு ஹபுஷ் அப்ஸ்ஹ எடுத்தார். மற்றொரு இளைஞரிடம் அகிடோ எனும் தற்காப்புக் கலையைக் காட்டினார் ராகுல் காந்தி.

ராகுல் காந்தி மீனவர்களோடும், மாணவர்களோடும் உரையாடியதை, தென்னக நாளிதழ்கள் மற்றும் தொலைக் காட்சி சேனல்கள், வடக்கத்திய ஊடகங்களைப் போல அல்லாமல் நியாயமாகவே செய்திகளை வெளியிட்டன. கடந்த வாரம் கூட தென் இந்தியாவில் சமூக ஊடங்களில் ராகுல் காந்தி குறித்து அதிகமாக பேசினார்கள்.

50 வயதான ராகுல் காந்தி, தென்னகத்தில் குறிப்பாக சட்டசபைத் தேர்தல் நடக்கவிருக்கும் தமிழகம் மற்றும் கேரளாவில் முழு கவனத்தை ஈர்ப்பது போலத் தெரிகிறது. தென்னக மக்களோடு இருப்பது அவருக்கு ஆறுதல் அளிப்பது போலத் தெரிகிறது.

தென் இந்தியாவில் இருக்கும் ஊடகத்தை கவனிப்பவர்கள், பத்திரிகை மற்றும் சமூக வலைதளங்களில் நிலவிய சூழல் குறித்து உண்மையிலேயே ஆச்சர்யப்படவில்லை. ராகுல் தீவிர அரசியலில் இருந்து தப்பிப்பதற்கும், தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்குமான இடமாக தென்னகம் இருக்கிறது என சிலர் நம்புகிறார்கள்.

“ஊடகங்கள் அவருக்கு ஒரு நீண்ட வாய்ப்பைக் கொடுக்க விரும்புகிறது. சில நேரங்களில் ராகுலே அதைக் கோருகிறார். அதற்காக அவர் விமர்சனத்துக்கும் உள்ளாகி இருக்கிறார், இருப்பினும் அவருக்கு சரியான அளவில் வாய்ப்பு கொடுக்கப் படுகிறது. பிராந்திய அளவிலான ஊடகங்களால் ராகுல் விமர்சிக்கப்படுகிறார், ஆனால் அந்த விமர்சனங்கள் எல்லை மீறுவதில்லை,” என இந்தியாவின் முதல் பிராந்திய தொலைக்காட்சி சனலின் நிறுவநரான சசி குமார் பிபிசி இந்தி சேவையிடம் தெரிவித்தார்.

**மற்ற காரணங்களும் இருக்கின்றன**

பிராந்திய ஊடகங்கள் இப்படி நடந்து கொள்வதற்கு வேறு சில காரணங்களும் இருக்கின்றன. “உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களைக் காட்டிலும் தென் இந்தியாவில் அரசியல் குறைந்த அளவுக்கு நச்சுத்தன்மை கொண்டதாக இருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் இந்துத்வா என்கிற விஷயம் மிகவும் பரவலாக இருக்கிறது. தென்னகத்தில் மிகக் கடுமையான சொற்போர் இல்லை,” என பிபிசி இந்தியிடம் தெரிவித்தார் தி இந்து பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் என்.ராம்.

“அதற்கு காரணம் தென் இந்தியாவில் காங்கிரஸ் வலுவாக இருப்பதால் அல்ல, கர்நாடகம் தவிர மற்ற மாநிலங்களில் பாஜக வலுவாக இல்லாதது தான் காரணம்,” என்கிறார் சசி குமார்.

“தன்னால் கடலில் குதித்து நீந்த முடியும், தன்னால் புஷ் அப்ஸ் எடுக்க முடியும் என்பது எல்லாம் அவரை வெளிப்படுத்தும் விதத்தில் இருக்கிறது. பிரதமர் நரேந்திர மோதியை விட நல்ல உடல் வலிமை கொண்ட ஒருவராக வந்து கொண்டிருக்கிறார் ராகுல். இது ஓர் அருமையான முரண். அரசியலில் தன்னை அதிக உடல் வலிமை கொண்டவராக காட்டிக் கொள்ளும் உத்தி ராஜிவ் காந்தியால் அறிமுகப் படுத்தப்படவில்லை, மாறாக நரேந்திர மோடி அதை அறிமுகப்படுத்தினார். 56 இன்ச் மார்புடையவர் என்கிற கோட்பாட்டை எதிர்க்கும் ஒரு வழி இது” எனக் கூறுகிறார் சசி குமார்.

“தன் தந்தை தமிழகத்தில் கொல்லப்பட்டார் என்கிற போதும், ராகுல் தமிழகத்தில் மகிழ்ச்சியாக இருப்பது போலத் தெரிகிறது. அதை அவர்கள் கடந்து வந்துவிட்டார்கள் என்பதும், அந்த நிகழ்வு ஒரு நிரந்தர வடுவை ஏற்படுத்தவில்லை என்பதும் மிகவும் குறிப்பிடத்தக்கது. தன் பாட்டி இந்திரா காந்தி மற்றும் தன் தந்தை ராஜிவ் காந்தியை விடவும் ராகுல் காந்தி தமிழகத்தில் சகஜமாக இருக்கிறார்” என என்.ராம் கூறுகிறார்.

அரசியல் ரீதியாகவும் ராகுல் காந்தி தென்னகத்துக்கு வரவேண்டியது அடிக்கடி அவசியமாகிறது “காரணம் கேரளாவின் வயநாடு தான் ராகுலை அமேதி தொகுதியின் தோல்வியில் இருந்து காப்பாற்றியது. தென்னகத்தில் நேரு - காந்தி குடும்பத்துக்கு எப்போதும் இருந்த ஆதரவை அவர் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார். தற்போது காங்கிரஸ் கட்சி தன் செல்வாக்கை இழப்பது போலத் தோன்றுகிறது, ஆனால் நேருவின் கட்சி இதைக் கடந்து வந்துவிடும் என்பது போலத் தான் தெரிகிறது” என்கிறார் விமர்சகரான பிஆர்பி. பாஸ்கர்.




“ராகுல் காந்தி தமிழகத்தில் சிறப்பாகவே நடத்தப்படுகிறார். சொல்லப் போனால் அவரை தமிழகத்தின் குழந்தை போல நடத்துகிறார்கள். ஒரு வில்லன் போல பார்க்கப்படும் அமித் ஷாவைப் போல ராகுல் காந்தி பார்க்கப்படவில்லை. ஒரு ஹகூல் கைஹ போலத் தான் பார்க்கப்பட்டார். இது தான் மக்களுக்கு ராகுல் காந்தி மீதிருக்கும் பிம்பம்” என்கிறார் நக்கீரன் பத்திரிகையைச் சேர்ந்த தாமோதரன் பிரகாஷ்.

தெலுங்கு மொழி பேசும் தெலங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசத்திலும் இதே கருத்து தான் நிலவுகிறது. “வடக்கத்திய ஊடகங்களைப் போல ராகுல் காந்தி இலக்கு வைத்து தாக்கப் படவில்லை. பிராந்திய அளவில் எந்த தலைவர்களும் இல்லை மற்றும் அப்பிராந்தியத்தில் ஆளும் பிராந்தியக் கட்சிக்கு, காங்கிரஸ் எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதை ஆங்கில ஊடகங்கள் அறிந்திருந்தார்கள்,” என ஹைதராபாத்தில் இருக்கும் ஒஸ்மானியா பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத் துறைப் பேராசிரியராக இருக்கும் பத்மஜா ஷா கூறுகிறார்.

“தெலுங்கு ஊடகங்களில் எல்லா விஷயங்களும் பிரசுரிக்கப்படவில்லை அல்லது ஒளிபரப்பப்படவில்லை, ஆனால் இதுவரை வெளியான எல்லாமே ராகுலுக்கு நேர்மறையாகவே இருந்தன. குறிப்பாக இளைஞர்களுடனான உரையாடல்கள் நல்ல விதத்திலேயே பார்க்கப்பட்டது,” என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ஜின்கா நாகராஜ்.

“கன்னட பத்திரிகைகள் தேசிய ஊடகங்களிலிருந்து அதிகம் மாறுபடவில்லை. கன்னட ஊடகங்கள் ராகுலை வேடிக்கைக்கு உள்ளாக்கியது அல்லது விமர்சித்தது. அதிலும் குறிப்பாக 2014-க்குப் பிறகு,” என்கிறார் உதயவானி என்கிற கன்னட நாளிதழின் முன்னாள் ஆசிரியர் பூர்ணிமா.

கேரளாவின் வயநாடு மக்களவைத் தொகுதியில் ராகுல் காந்தியே நின்றது, அக்கட்சிக்கு பெரிய உத்வேகத்தைக் கொடுத்தது. ஊடக வெளிச்சம் தொடர்ந்து ராகுல் காந்தி மீதே குவிந்திருந்தது. ”இருப்பினும் சபரிமலை குறித்து அவர் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் மோசமாகப் பேசுவதை அவர் தடுத்து நிறுத்தவில்லை. இங்கு தான் அவருடைய அரசியல் மிகவும் மேலோட்டமான தாகிவிட்டது,” என்கிறார் என்.ராம்.

“சில பிரச்னைகளைக் குறித்து அரசிடம் கேள்வி எழுப்ப வேண்டிய ஊடகங்கள், ராகுல் காந்தியிடம் கேள்வி எழுப்புகிறது. இப்படிப்பட்ட பாகுபாட்டை ராகுல் காந்தியிடம் ஊடகங்கள் காட்டுகின்றன,” என பெயர் குறிப்பிட விரும்பாத காங்கிரஸ் தலைவர் ஒருவர் கூறினார்.

**‘எல்லாம் விளம்பரம்தான்’**

“அவர் சச்சின் டெண்டுல்கர் போல இருக்கிறார். சச்சின் கூட்டத்தில் இருந்து தப்பித்து மைதானத்துக்கு நடுவில் விளையாட விரும்பினார், அதை அவர் ரசித்தார். அதே போல, தீவிர அரசியலில் இருந்து ராகுல் காந்திக்கு தப்பிக்கும் ஓரிடம் தான் தென் இந்தியா. ராகுல் காந்திக்கு ஆலோசனை வழங்குபவர்களுக்கு நீண்ட கால திட்டம் இருக்கிறது. புஷ் அப்ஸ் எடுப்பது எல்லாம் வெறும் விளம்பரத்துக்குத் தான்” என பிபிசி இந்தி சேவையிடம் கூறுகிறார் இந்திய ஜர்னலிஸம் ரிவ்யூவின் ஆசிரியர் மற்றும் அவுட்லுக் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் கிருஷ்ண பிரசாத்.

“தேர்தலுக்கான அமெரிக்க வழிகள் பல இருக்கின்றன. ஆறு ஆண்டுகளுக்கு முன் பாஜக விளையாடிய ஆட்டத்தை தற்போது காங்கிரஸ் விளையாடுகிறது. ஊடகங்கள் ராகுலை ‘பப்பு’ என கட்டமைத்திருக்கிறது. உண்மையில் அவர் தன் பலத்தை வெளிகாட்டியுள்ளார், தனது வேலையைச் செய்து வருகிறார். இவை அனைத்தும் கொஞ்ச காலத்துக்கு தான். இது போன்ற விஷயங்கள் வாக்குகளாக மாறுவதைப் பார்ப்பது தான் மிகவும் கடினம், என்றார் கிருஷ்ண பிரசாத்.

“அவர் காலப்போக்கில் முதிர்ச்சியடைந்திருக்கிறார். அவர் தனது சொந்த பாணியைக் கொண்டிருப்பதாகவும் கூறுகிறார். மில்லினியல் தலைமுறை அதை வெறுப்பாகப் பார்க்காது எனலாம்,” என்கிறார் சசி குமார். •





# புலமைச் சிகரம்


## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

7

### 2013

* தொடக்கத்தில் உள்ள உருவில் குறைவாக இருக்கும் பகுதிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01.





02.




* வெற்றிடத்துக்குப் பொருத்தமானவிடையைத் தெரிவுசெய்க.


18.





### 2014

* 01ஆம் 02 ஆம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

01.





02.




### 2015

* 01 ஆம் 02 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ளஉருவைப் பூர்த்தி செய்வதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.

01.




**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# ஐ.நா. தீர்மான புதுப்பிக்கப்பட்ட வரைவில் தமிழர் தரப்பு முன்மொழிவுகள் இல்லை!

ஜெனிவா,மார்ச்.07

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான தீர்மானத்தின் புதுப்பிக்கப்பட்ட வரைவு தற்போது வெளியாகியுள்ளது.**

ஆனால், அதில் சர்வ தேச பொறுப்புக்கூறும் பொறிமுறை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்த தமிழர் தரப்பு விடுத்த வேண்டுகோள்கள் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இலங்கை குறித்த தீர்மானத்தின் புதுப்பிக்கப்பட்ட வரைவில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தை எதிர்கால விசாரணைகளில்பயன்படுத்துவதற்காக மனித உரிமைகள் மற்றும் அது தொடர்பான குற்றங்கள் குறித்தஆதாரங்களைசேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அதிகளவில் ஓரங்கட்டப்படுதல், சிவில் சமூகத்தினர் கண்காணிக்கப்படுதல் மற்றும் அச்சுறுத்தப்படுதல், ஊடகச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள், யுத்தத்தால் உயிரிழந்தவர்களை பொது மக்கள் நினைவுகூறுவது மீதான கட்டுப்பாடுகள், நினைவுத்தூபிகள் அழிக்கப்படுதல் குறித்த கரிசனைகளும் புதிதாக இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணையகம், காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் ஆகியன வலுவான விதத்திலும் சுதந்திரமாகவும் செயல்படுவதை இலங்கை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும் என்ற விடயமும் புதுப்பிக்கப்பட்ட வரைவில் இடம்பெற்றுள்ளது.

ஆனால், போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என நம்பகதன்மை மிக்க விதத்தில் குற்றம்சாட்டப்பட்ட இலங்கை அதிகாரிகளுக்கு எதிராகப் பயணத்தடைகள் மற்றும் போக்குவரத்து தடைகள் போன்றவற்றை விதிக்குமாறும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்த பரிந்துரைகள் குறித்து எதனையும் புதுப்பிக்கப்பட்ட வரைவு குறிப்பிடவில்லை எனவும் தெரியவருகிறது. (எ)

# தனிமைப்படுத்தலை மீறிய 3,307 பேர் இதுவரை கைது!

கொழும்பு,மார்ச்.07

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கும் நோக்கில் கடைப்பிடிக்கப்படும் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிச் செயல்பட்ட குற்றச்சாட்டில் இதுவரை 3 ஆயிரத்து 307 பேர் கைது செய்யப்பட்டனர்.

அந்தவகையில் நேற்றுக்காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலத்தில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிச் செயல்பட்ட குற்றச்சாட்டில் 13 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்காமையால் இவர்கள் கைது செய்யப்பட்டனர். (எ)

# பஸ் விபத்து: 12 பேர் காயம்

கொழும்பு, மார்ச்.07

கொழும்பு - பதுளை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 12 பேர் காயமடைந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை, பதுளையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் ஒன்று, எல்ல - ஹல்பே பகுதியில் விபத்துக்குள்ளாகியது என பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள், தெமோதரை மற்றும் பதுளை வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துச்சம்பவம்தொடர்பானமேலதிக விசாரணைகளை எல்ல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ)

# இலங்கை விமானப்படையின் 70ஆவது ஆண்டு விழா சாகச கண்காட்சி பிரதமரின் தலைமையில் நிறைவு





கொழும்பு, மார்ச்.07

இலங்கை விமானப்படையின் 70 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விமான வான் சாகச கண்காட்சியின் நிறைவு விழா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் காலி முகத்திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மூன்று தினங்களாக நடைபெற்ற வான் சாகச கண்காட்சி, கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகியது.

இந்நிகழ்வை இலங்கை விமானப்படை மற்றும் இந்திய விமானப் படை இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இறுதி நாள் நிகழ்வில் பங்கேற்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விமானப்படை தளபதி எயர் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவால் வரவேற்கப்பட்டார்.

1951 மார்ச்02ஆம்திகதி, ரோயல்விமானப்படையாக நிறுவப்பட்ட இலங்கை விமானப்படை, 1972 மே 22ஆம் திகதி, இலங்கை விமானப்படையாக மாற்றப்பட்டது.

விமான வான் சாகச கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு பிரதமரின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ. இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பிரதமர் அலுவலக ஊழியர்களின் பிரதானி யோஷித ராஜபக்ஷ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)




# சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்த வேண்டும்

## நல்லூர் போராட்டத்துக்கு வவுனியா உறவுகள் ஆதரவு

யாழ்ப்பாணம்,மார்ச்.07

**இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக சர்வதேச விசாரணையை வலியுறுத்தி யாழ்ப்பாணம் நல்லூரில் முன்னெடுக்கப்பட்டு வரும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் நேற்று இணைந்து கொண்டனர்.**

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டம் 7 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

நீதி வேண்டிய இந்தப் போராட்டம் நல்லை ஆதீனம் முன்பு யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதினூடாக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித நேயத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் தமிழினத்துக்கு எதிராக இனவழிப்பு என்பவற்றுக்கு சர்வதேச நீதி வேண்டும் என இங்கு பிரதானமாகக் கோரப்பட்டுள்ளது.

மேலும், தமிழினத்தின் மீதான இனவழிப்பு தொடராது இருப்பதற்கு தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தப் போராட்டத்தில் நேற்று வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்து கொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தினர். (எ)

### கொரோனா தொற்றிலிருந்து மேலும் 448 பேர் பூரணசுகம்

கொழும்பு, மார்ச்.07

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 448 பேர் குணமடைந்தனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 81 ஆயிரத்து 769 ஆக உயர்ந்துள்ளது. (எ)

### போலி ஆவணங்கள் தயாரித்தோர் கைது

கொழும்பு,மார்ச்.07

போலி ஆவணங்களைத் தயாரித்து வாகன மோசடியில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் இருவரை மேல் மாகாண புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: வாடகைக்கு வாகனங்களை வழங்கும் நிறுவனத்தில் வாகனங்களைப் பெற்று அவற்றுக்கான போலி உறுதிப்பத்திரங்களைத் தயாரித்து, குறைந்த விலையில் வேறு நபர்களுக்கு விற்பனை செய்த இரு சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இந்த சந்தேக நபர்கள் முல்லேரியா மற்றும் வெல்லம்பிட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் இதுபோன்ற 17 குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது- என்றார். (எ)

### பதுளை பொது வைத்தியசாலையில் தொற்றாளர்கள் 34 ஆக அதிகரிப்பு

பதுளை, மார்ச்.07

பதுளை பொது வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளது என வைத்தியசாலை நிர்வாகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வைத்தியசாலையில் பணிபுரியும் 2 வைத்தியர்கள், 3 சுகாதார ஊழியர்கள் மற்றும் 29 நோயாளர்களுக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 70 வயது நபர் ஒருவர், பதுளை வைத்தியசாலையில் உயிரிழந்ததுடன், அவரது சடலம் பதுளை பொது மயானத்தில் நேற்று முன்தினம் தகனம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பதுளை வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவும் தற்காலிகமாக மூடப்பட்டது என வைத்தியசாலை நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும், ஏனைய பிரிவுகளில் வைத்திய நடவடிக்கைகள் வழமைபோன்று இடம்பெற்று வருவதாக நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

### சுற்றாடல் பிரச்னைகளை தீர்க்க அமைச்சுக்கள் இணைப்பு திட்டம்

கொழும்பு, மார்ச்.07

சுற்றாடல் தொடர்பில் எதிர்நோக்கப்படும் பிரச்னைகளுக்கு சில அமைச்சுக்கள் ஒன்றிணைந்து அமைச்சுக்களுக்கிடையிலான இணைப்பு வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

இந்த இணைப்பு வேலைத் திட்டத்துக்காக சுற்றாடல் அமைச்சு, வனவிலங்கு மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு, நீர்வள அமைச்சு, வன ஜீவராசிகள் அமைச்சு ஆகியன இணைந்துள்ளன.

இந்த அமைச்சுக்களின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது முத்து ராஜவெல ஈரலிப்பு நிலத்தை பாதுகாத்தல், அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கிராமிய காணிகளை மீண்டும் விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவது தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. (எ)

# தோட்டங்கள் இராணுவத்தினர் வசம்: முயற்சிகளை அனுமதிக்க முடியாது!

## இராதாகிருஷ்ணன் கடும் எதிர்ப்பு

ஹற்றன், மார்ச்.07

மலையக பெருந்தோட்டங்களை இராணுவத்தினர் வசம் கொண்டு வருவதற்கான முயற்சிகளை அனுமதிக்கப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

‘சம்பள நிர்ணய சபை 1000 ரூபா விடயத்தில் தலையிட்டதனால் இன்று வித்தியாசமாக தோட்ட துறைமார் தொழிலாளர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் சூழல் உருவாகியுள்ளது. ஹோல்டன் மற்றும் கந்தப்பளை தோட்டங்களில் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் தோட்ட துறைமார் வீதியில் இறங்கிப் போராடும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதன் பிரதிபலிப்பாக தற்போது ஹய்போரஸ்ட் மாகுடுகல தோட்டத்தில் 6 இராணுவத்தினர் தோட்ட நிர்வாகத்தை பொறுப்பேற்கத் தயாராவதாக அறிய முடிகின்றது. இது தொடர்பில் மகுடுகல தோட்ட நிர்வாகத்தினரிடம் வினவியதற்கு தமக்கு அது தொடர்பில் தெரியாது என்கின்றனர். இவ்வாறு இராணுவத்திடம் தோட்ட நிர்வாகத்தை ஒப்படைப்பது பூதாகரமானது.



கடந்த காலங்களில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் இராணுவமயமாக்கலை கொண்டுவந்த தன் மூலமே யுத்தம் ஏற்பட்டது. ஆகவே தொழிலாளர்களை நசுக்க கம்பனிகளும், அரசாங்கமும் முற்படுகிறதா? என்ற சந்தேகமுள்ளது. ஆகவே அரசாங்கம் இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடின் மக்கள் போராட்டம் வெடிக்கும்.

தற்போதைய நிலையில் 1000 ரூபாவை கொடுத்து ஏனைய நலன்புரி விடயங்களில் கம்பனிகள் கைவைத்தால் மலையகத்தில் பெரும் தொழிற்சங்கப் போராட்டம் இடம்பெறும். இதன்போது அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து செயல்பட வேண்டும்- என்றார். (எ)



# ஈராக்கில் பாப்பரசருக்கு அமோகமான வரவேற்பு!

## ஷியா முஸ்லிம்களின் ஆன்மீக தலைவரை சந்தித்தார்







**பக்தாத், மார்ச் 07**

**ஈராக் சென்றடைந்த பாப்பரசர் பிரான்சிஸுக்கு நேற்றுமுன்தினம் அங்கு அமோக வரவேற்பு வழங் கப்பட்டுள்ளது.**

**பாப்பரசர் பிரான்சிஸ் தனது ஈராக் பயணத்தின் இரண்டாவது நாளான இன்று கோடிக்கணக்கான ஷியா முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவரான கிராண்ட் அயதுல்லா அலி அல்-சிஸ்தானியை புனித நகரமான நஜாப்பில் சந்தித்துப் பேசினார்.**

கொவிட் -19 தொற்று நோய் நெருக்கடி மற்றும் ஈராக்கில் அமெரிக்க கூட்டுப்படைத் தளங்கள் மீது சில நாட்களுக்கு முன் இடம்பெற்ற ஏவுகணைத் தாக்குதல் ஆகிய ஆபத்துக்களின் மத்தியில் பாப்பரசர் ஈராக் சென்றடைந்தார்.

2003 ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையிலான ஈராக் படையெடுப்பிலிருந்து வன்முறை அலைகளால் பாதிக்கப்பட்டுள்ள ஈராக்கின் கிறிஸ்தவ சிறுபான்மையினர் எதிர்கொண்டுவரும் பாதிப்புக்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து 90 வயதான முன்னணி ஷியா மதகுருவுடன் பாப்பரசர் பிரான்சிஸ் நேற்று பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து ஆபிரகாம் நபி பிறந்த இடமாக நம்பப்படும் இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் யூத மதத்தின் மையமான உர் எனப்படும் பண்டைய நகருக்கு பாப்பரசர் சென்றார்.

இதேவேளை பாப்பரசரின் ஈராக் பயணத்தை ஒட்டி அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. சுமார் 10,000 ஈராக்கிய பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக அங்கு சுழற்சி முறையில் ஊரடங்கு உத்தரவும் அமுலில் உள்ளது.

இதற்கிடையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பக்தாத் விமான நிலையத்தில் வந்திறங்கிய பாப்பரசரை ஈராக் பிரதமர் முஸ்தபா அல் காதிமி வரவேற்றார்.

விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் பேசிய பாப்பரசர் பிரான்சிஸ், வன்முறை, தீவிரவாதம், பிளவுகள் மற்றும் சகிப்பின்மை ஆகியவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க அழைப்பு விடுத்தார்.

போர்க்களால் ஈராக் பேரழிவுகளைச் சந்தித்துள்ளது. பயங்கரவாதம் மற்றும் குறுங்குழுவாதங்களால் அழிவுகள் ஏற்பட்டுள்ளன எனவும் தனது உரையில் பாப்பரசர் தெரிவித்தார்.

(அ)

# ‘ரைம்’ சஞ்சிகை அட்டைப்படத்தில் டில்லி விவசாயிகளின் போராட்டம்!




வொஷிங்டன், மார்ச் 07

இந்தியாவில் பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு கொண்டு வந்துள்ள வேளாண் சட்டங்களை வாபஸ் பெறக்கோரி, டில்லியை முற்றுகையிட்டு விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பிரபல அமெரிக்க இதழான ’ரைம்’ சஞ்சிகையின் மார்ச் மாதத்துக்கான இதழின் அட்டைப்படத்தில் டில்லி திக்ரி எல்லையில் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களின் படம் இடம்பெற்றுள்ளது. விவசாயிகள் போராட்டத்தின் முன்னணி வீரர்கள் என குறிப்பிடப்பட்டு இந்தப் படம் வெளியாகியுள்ளது.

போராட்டத்தில் பெண்கள் பங்குபெற வேண்டாம் என்கிற உச்ச நீதிமன்றத்தின் பரிந்துரையையும் மீறி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண்களைக் குறித்து ’ரைம்’ இதழ் இந்த அட்டைப்படத்தை வெளியிட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# ஆப்கான் பனிச்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழப்பு!

காபூல், மார்ச் 07

ஆப்கானிஸ்தானின் படாக்ஷன் மாகாணத்தில் ஏற்பட்ட பெரும் பனிச்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

ராகிஸ்தான் மாவட்டத்தின் ஜராண்டாப் கிராமத்தில் ஏற்பட்ட இந்தப் பனிச்சரிவில் சிக்கிய மேலும் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர். இப்பகுதி தலிபான்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தாலும் சிக்கியவர்களுக்கு உதவ முயற்சிகள் நடந்து வருவதாக ஆப்கான் அரசின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டில் பெப்ரவரி 4-முதல் 6 -ஆம் திகதி வரை ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லையில் கிராமங்களைத் தாக்கிய தொடர் பனிச்சரிவுகளில் சுமார் 100 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும், 2015 ஆம் ஆண்டில் பஞ்ச்ஷீர் மாகாணத்தில் ஏற்பட்ட பயங்கர பனிச்சரிவுகளில் குறைந்தது 310 பேர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



# ஈரான் பயணிகள் விமானம் கடத்தல் முயற்சி முறியடிப்பு!

தெஹ்ரான், மார்ச் 07

ஈரானில் பயணிகள் விமானத்தைக் கடத்த மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சி முறியடிக்கப்பட் டுள்ளதாக இஸ்லாமியப் புரட்சிகர காவல்படையினர் அறிவித்துள்ளனர்.

ஈரான் எயார் நிறுவனத்துக்குச் சொந்தமான ஐ.ஏ-334 போக்கர் 100 பயணிகள் விமானம் அஹ்வாஸ் விமான நிலையத்தில் இருந்து மஷாத் நோக்கிக் கடந்த வியாழக்கிழமை இரவு 10.22 மணிக்கு புறப்பட்டுச் சென்றது.

விமானத்தில் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் இருந்துள்ளார். இதனையடுத்து புறப்பட்டுச் சென்ற விமானம் ஈரானில் உள்ள இஸ்பாஹான் விமான நிலையத்தில் அவசர அவசரமாகத் தரையிறக்கியது.

சந்தேக நபர் குறித்து ஈரான் புரட்சிகர காவல் படைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து தரையிறங்கிய விமானத்தில் இருந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில் விமானத்தைத் திசைதிருப்பி அதனைக் கடத்த முயன்றதாக சந்தேகநபர் ஒப்புக்கொண்டார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# செவ்வாயில் நாசாவின் விண்கலம் சில மீற்றர்கள் நகர்ந்து ஒத்திகை!



பாரிஸ், மார்ச் 07

நாசா ரோவர் விண்கலம் செவ்வாயில் தரையிறங்கி இரண்டு வாரங்களின் பின்னர் தனது முதல் தரை நகர்வை நிறைவு செய்துள்ளது.

பெப்ரவரி 18 ஆம் திகதி செவ்வாயில் “ஜெஸீரோ கிரேட்டர்” (Jezero Crater) என்கின்ற பள்ளத்தாக்குப் பகுதியில் தரையிறங்கிய ரோவரில் அதன் கருவிகளைப் பரிசீலிக்கும் பணியை விஞ்ஞானிகள் கடந்த சில நாட்களாக மேற்கொண்டிருந்தனர். அப்பணிகள் வெற்றிகரமாக முடிவடைந்ததை அடுத்தே விண்கலம் அதன் முதலாவது பயணத் தைத் தொடங்கியது என்ற தகவலை நாசா வெளியிட்டிருக்கிறது.

கடந்த வியாழக்கிழமை அது பரீட்சார்த்தமாக சில மீற்றர்கள் நகர்ந்தபோது தரையில் அதன் சக்கரங்களின் தடயங்களை கமெராக்கள் படம் பிடித்து அனுப்பின. செவ்வாயில் இதற்கு முன்னர் தரையிறங்கிய சிறிய விண்கலகளை விட Perseverance வேகமானது .பலமான ஆறு சக்கரங்களுடன் அது நாளொன்றுக்கு 200 மீற்றர்கள் தூரம் பயணிக்கும் என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். செவ்வாயில் ஒரு நாள் என்பது பூமியின் ஒரு நாளை விட மிக நீண்டது.

கார் ஒன்றின் அளவைக் கொண்ட Perseverance விண்கலம் இயங்குவதற்கான சக்தி அணு பற்றறி (Nuclear Battery) மூலம் வழங்கப்படுகிறது. அங்கு இரவில் நிலவும் கடுமையான குளிரில் தாக்குப் பிடிப்பதற்கான வெப்பத்தை சிறிய அணு மின் பிறப்பாக்கியே வழங்குகிறது. புளூரோனியம் திரவ எரிபொருள் மூலம் அணு பற்றறிக்கு மின்னூட்டும் நவீன தொழில் நுட்பம் அதில் பயன்படுத்தப்படுகிறது.அதன் அணு பற்றறி தொடர்ந்து 14 ஆண்டுகள் சக்தி வழங்கக் கூடியது எனத் தெரிவிக்கப்படுகிறது.


டெம்பா பவுமா


டீன் எல்கர்

## தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் புதிய தலைவர்களாக எல்கர்- பவுமா!

மட்டுப்படுத்தப்பட்ட தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் தலைவராக டெம்பா பவுமா நியமிக்கப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்கா கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அதேபோல டெஸ்ட் அணியின் தலைவராக டீன் எல்கர் நியமிக்கப்பட்டுள்ளார். எல்கர் முன்னதாக ஜூலை 2017இல் லோர்ட்ஸில் நடந்த ஒரு டெஸ்டிலும், 2019 ஜனவரியில் பாகிஸ்தானுக்கு எதிராக வாண்டரர்ஸில் நடந்த டெஸ்டிலும் தேசிய 19 வயதுக்குட்பட்ட அணியான தென்னாப்பிரிக்கா ஏ அணிக்கும் தலைமை தாங்கியுள்ளார்.

முன்னதாக டு பிளெஸிஸ் அணித்தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்ததையடுத்து கடந்த ஆண்டு பெப்ரவரியில் இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு முன்பு மட்டுப்படுத்தப்பட்ட தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் தலைவராக குயின்டன் டி கொக் பெயரிடப்பட்டார்.

இதன்பிறகு டிசெம்பரில், 2020-21 சீசன் முடியும் வரை டெஸ்ட் அணியின் தலைவராக செயற்பட்டார். இதில் ஏழு போட்டிகளில் ஐந்தில் அணி தோல்வியை சந்தித்தது. இந்த நிலையில் அவர் அணித்தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.



## புசோவிக்ஸ்- கோரிக் அரையிறுதிக்கு முன்னேற்றம்!

ஏபினன் அம்ரோ உலக ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டிகளில், மார்டன் புசோவிக்ஸ் மற்றும் போர்னா கோரிக் ஆகியோர் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியொன்றில், இத்தாலியின் மார்டன் புசோவிக்ஸ், அமெரிக்காவின் டொமி போல்லை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், மார்டன் புசோவிக்ஸ், 6-4, 6-3 என்ற நேர் செற் கணக்குகளில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

இன்னொரு ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியொன்றில், குரேஷியாவின் போர்னா கோரிக்கும், ஜப்பானின் கெய் நிஷிகோரியும் மோதினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், போர்னா கோரிக்கு கெய் நிஷிகோரி கடும் நெருக்கடி கொடுத்தார். இதனால். இவர்கள் விளையாடிய இரண்டு செற்களும் டை பிரேக் வரை நீண்டன.

இதில் இருவரும் விட்டுக்கொடுக்காமல் விளையாடிய போதும், இறுதிவரை ஆக்ரோஷமாக விளையாடிய போர்னா கோரிக், செட்டுகளை 7-6, 7-6 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் அடியெடுத்து வைத்துள்ளார்.

# இலங்கை சுழற்பந்து வீச்சாளர்கள் மேற்கிந்தியத்தீவுகளை சுருட்டினர்



ரி-20 போட்டிகளில் தொடர்ந்து 8 போட்டிகளில் தோல்வியடைந்து நொந்து போயிருந்த இலங்கை அணி நேற்று, மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான இரண்டாவது போட்டியில் வெற்றியீட்டியது.

இலங்கை சுழற்பந்துவீச்சாளர்கள் மேற்கிந்தியத்தீவுகளை கட்டிப்போட, 43 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 160 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

தனுஷ்க குணதிலக்க 56 ஓட்டங்களையும் பதும் நிஸங்க 37 ஓட்டங்களையும் அசேன் பண்டார 27 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். தினேஷ் சந்திமல், திசர பெரேரா ஆகியோர் ஒற்றை இலக்கங்களில் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் பிராவோ 25 ஓட்டங்களிற்கு 2 விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 161 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 18.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 117 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அதிகபட்சமாக ஒபேய் மெக்கொய் 23 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். கிறிஸ் கெய்ல் 16, பொலார்ட் 15 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் லக்ஸன் சந்தகன் 10 ஓட்டங்களிற்கு 3 விக்கெட்டுகளையும் வனிந்து ஹசரங்க 16 ஓட்டங்களிற்கு 3 விக்கெட்டுகளையும் துஸ்மந்த சமீர 26 ஓட்டங்களிற்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். அகில தனஞ்ஜெய 13 ஓட்டங்களிற்கு 1 விக்கெட். ஹசரங்க ஆட்டநாயகன்.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியை பெற்றுள்ளன.

# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது இந்தியா!




இங்கிலாந்து அணிக்கெதிரான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், இந்தியா அணி இன்னிங்ஸ் மற்றும் 25 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் இந்தியா அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. இதன்மூலம் ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டிக்கு இந்தியா அணி முன்னேறியுள்ளது.

ஜூன் 10ஆம் திகதி லோட்ஸ் மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில், இந்தியா அணி, நியூஸிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

அஹமதாபாத் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 205 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, பென் ஸ்டோக்ஸ் 55 ஓட்டங்களையும் டேனியல் லோரன்ஸ் 46 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், அக்ஸர் பட்டேல் 4 விக்கெட்டுகளையும் அஸ்வின் 3 விக்கெட்டுகளையும் சிராஜ் 2 விக்கெட்டுகளையும் வொஷிங்டன் சுந்தர் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இந்தியா அணி, 365 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ரிஷப் பந்த் 101 ஓட்டங்களையும், வொஷிங்டன் சுந்தர் ஆட்டமிழக்காது 96 ஓட்டங்களையும் ரோஹித் சர்மா 49 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில், பென் ஸ்டோக்ஸ் 4 விக்கெட்டுகளையும் ஜேம்ஸ் ஆண்டர்சன் 3 விக்கெட்டுகளையும் ஜெக் லீச் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 160 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி, 135 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் இந்தியா அணி இன்னிங்ஸ் மற்றும் 25 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, டேனியல் லோரன்ஸ் 50 ஓட்டங்களையும் ஜோ ரூட் 30 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியா அணியின் பந்துவீச்சில், அஸ்வின் மற்றும் அக்ஸர் பட்டேல் ஆகியோர் தலா 5 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம், ஒரு தொடரொன்றில் ஒரு போட்டியில் தோல்வியடைந்து மீதமுள்ள போட்டிகளை வெற்றிகொண்ட ஆறாவது தொடரின் வெற்றியாக இது பார்க்கப்படுகின்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக ரிஷப் பந்த் தெரிவு செய்யப்பட்டார். தொடரின் நாயகனாக அஸ்வின் தெரிவு செய்யப்பட்டார்.

(அ)



# மைத்திரிபாலவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா?

## முஜிபுர் ரஹ்மான் கேள்வி

கொழும்பு,மார்ச்.07
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைக்கேற்ப, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அரசாங்கத்திடம் கேள்வியெழுப்புவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, பேராயர் அறிவித்துள்ள கறுப்பு ஞாயிறு போராட்டத்துக்கு நாமும்எமது முழுமையான ஆதரவை வழங்குவோம் என்றும் முஜிபுர் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கும் முக்கிய காரணியாகக் காணப்பட்டது.

தாக்குதல்களின் பின்னர் மக்கள் மத்தியில் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தியவர்கள்தற்போது முக்கிய அமைச்சுப்பதவியை வகிக்கின்றனர்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவினால் தகவல்கள் தெரிந்திருந்தும் அவற்றை தடுக்க தவறியவர்கள் தொடர்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், பிரதான சூத்திரதாரிகள் தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை.

தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களினதும், தாக்குதல்தாரிகளின் செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களினதும் பிரதான எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது முக்கிய சூத்திர தாரிகள் வெளிப்படுத்தப்பட என்பதேயாகும்.

எனினும் அந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை. தாக்குதல்கள் தொடர்பில் தகவல்கள் கிடைத்திருந்தும் அவற்றை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திர கட்சியுடன் இணைந்து இந்த அரசாங்கம் ஆட்சியமைத்திருக்கிறது.

அவ்வாறெனில் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சி உறுப்பினரான மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா? என்பதே எமது கேள்வியாகும்.

அத்தோடு சஹ்ரானுக்கு உதவியவர்கள், தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? என்ற சந்தேகமும் சமூகத்தின் மத்தியில் எழுந்துள்ளது.

எனவே, உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, பேராயர் அறிவித்துள்ள கறுப்பு ஞாயிறு போராட்டத்துக்கு நாமும் எமது முழுமையான ஆதரவை வழங்குவோம். - என்றார். (எ)

## அநீதிகளுக்கு சர்வதேச ரீதியில் நீதிவேண்டி

# மட்டக்களப்பில் 4 ஆவது நாளாக உணவு தவிர்ப்புப் போராட்டம்!

மட்டக்களப்பு, மார்ச்.07
இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச ரீதியில் நீதிவேண்டி வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் சுழற்சி முறையிலான போராட்டம் மட்டக்களப்பிலும் 4 ஆவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஏற்பாட்டில்இந்தப்போராட்டம்முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அன்னைபூபதி உண்ணாவிரதமிருந்து உயிர்நீர்த்த மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலில் தொடர்ந்து 4ஆவது நாளாக சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

சுழற்சி முறையில் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்துக்கு பலக்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூக செயல்பாட்டாளர்கள் ஆதரவை வழங்கி வருகின்றனர்.

குறித்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் 4ஆவது நாளான நேற்று மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) வருகை தந்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஆதரவு தெரிவித்தார். (எ)


# உலக ஒருமை தினம்



**திகதி - மார்ச் 7, 2021 - உலகினை ஒருமை நிலைக்கு கொண்டுசெல்வதற்காக ஸ்ரீ அம்மா பகவான் & ஸ்ரீ ப்ரீதாஜி மற்றும் ஸ்ரீ கிருஷ்ணாஜியுடன் இணைந்து உலகெங்கிலும் இருந்து ஒரு கோடிக்கும் மேலானவர்கள் இணைந்து வழங்கும்**

## தீக்ஷை இன்று மாலை 6 மணிக்கு

ஸ்ரீப்ரீதாஜி மற்றும் ஸ்ரீ கிருஷ்ணாஜி ஆகியோர் நம் காலத்தின் ஆன்மீகத் தலைவர்கள், ஆன்மீகவாதிகள் மற்றும் தத்துவஞானிகள். ஸ்ரீ அம்மாபகவான், ஸ்ரீ ப்ரீதாஜி மற்றும் ஸ்ரீ கிருஷ்ணாஜி ஆகியோர் இணைந்து உருவாக்கியுள்ள ஏகம் திருத்தலம், சென்னைக்கும் திருப்பதிக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு சக்தி மையம் ஆகும். ஸ்ரீப்ரீதாஜி மற்றும் ஸ்ரீகிருஷ்ணாஜி ஏகம் இயக்கத்தின் இணை நிறுவனர்கள்.

மனிதகுலத்தின் நலன் மீதுள்ள மிகுந்த ஆர்வம் காரணமாக ஸ்ரீ ப்ரீதாஜி மற்றும் ஸ்ரீ கிருஷ்ணாஜி, உலக ஒருமை தினத்தை பிரகடனப்படுத்தியுள்ளார்கள்.

இந்த உலகளாவிய நிகழ்வு, உலகத்தை பிரிவினையிலிருந்து ஒருமையை நோக்கி முன்னேற்றும். அரசியல், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளாக இருந்தாலும் பிரிவு என்பது அனைத்துப் பிரச்சினைகளின் மூல காரணம் என்று அவர்கள் நம்புகிறார்கள். தீர்வு விழிப்புணர்வு நிலையிலிருந்து வருகிறது; பிரிவிலிருந்து ஒருமையை நோக்கிய ஒருமைப்பாடு என்பது உண்மையான தீர்வுகளை நாம் கண்டறியக்கூடிய ஒரு இடம்.

இதற்காக ஸ்ரீ ப்ரீதாஜியும் ஸ்ரீ கிருஷ்ணாஜியும் மார்ச் 7 ஆம் திகதி 'உலக ஒருமை தினத்தை' தொடங்குகின்றனர், இது ஒரு மணி நேர உலகளாவிய நேரடி ஒன்லைன் நிகழ்வாக இருக்கும். உலக ஒருமை என்பது பூமியை பாதிக்கும் ஒரு பெரிய அதிர்வு! உலகெங்கிலும் இருந்து 10 மில்லியனுக்கும் அதிகமான மக்கள், ஒருமையின் அற்புதமான நிலைகளுக்குச் செல்வார்கள். உலக ஒருமைப்பாட்டை நோக்கி நகர்ந்த 10 மில்லியன் மக்களும் தீக்ஷை என்ற ஆன்மீக பரிமாற்றத்தை வழங்குவார்கள்.

தீக்ஷை என்பது ஒரு பண்டைய நிகழ்வு. இதனை பெறுபவர்களின் மூளையில் முழுமையை நோக்கி ஒரு நரம்பியல் மாற்றத்தைத் தொடங்குகிறது . தீக்ஷையின் போது உங்கள் மூளை மற்றும் விழிப்புணர்வுநிலை, உங்கள் சொந்த தெய்வீக சக்தியை உணர வழி வகுக்கிறது.

உலக ஒருமை தினத்தில் தீக்ஷை வழங்கும் 10 மில்லியன் மக்களும் ஒன்னெஸ் மெடிடேட்டர்கள் என்று அழைக்கப்படுவார்கள். இந்த ஒன்னெஸ் மெடிடேட்டர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தீக்ஷையின் மூலம் உருவாக்கும் அதிர்வுகள், மனித சைதன்யத்தில் ஒரு பெரிய எதிரொலியை ஏற்படுத்துகின்றன.

ஹார்ட்மத் இன்ஸ்டிடியூட் மற்றும் உலகெங்கிலும் உள்ள வேறு சில ஆராய்ச்சி நிறுவனங்கள் இந்த அற்புதமான தீக்ஷையின் தாக்கத்தை அன்றைய மனிதகுல உணர்வில் அளவிட எங்களுடன் இணைத்துள்ளனர்.

இன்று விஞ்ஞானம் சைதன்யத்தின் தாக்கத்தை கூட கவனிக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது. உலக உணர்வு மீது நமது தீக்ஷையின் தாக்கம் காந்தமானிகள் (மெகனடோ மீட்டர்) மூலம் அளவிடப்படும் என்பது உற்சாகமூட்டுகிறது. அந்த நேரத்தில் ஏற்படும் அதிர்வலைகளின் எண்ணிக்கையும் பதிவு செய்யப்படும்.

இந்த அலையை உருவாக்குவதற்கும், மில்லியன் கணக்கான மக்களுக்குள் தீக்ஷை சக்தியை உருவாக்குவதற்கும், ஸ்ரீப்ரீதாஜி மற்றும் ஸ்ரீகிருஷ்ணாஜி 21 நாட்களுக்கு மகா தபஸில் நகர்ந்துள்ளனர். மகா தபஸ் பெரும் புண்ணியம் சார்த்த நடவடிக்கைகளை உள்ளடக்கியது. மேலும் அவர்களின் மகா தபஸின் பலன் உலக ஒருமைக்காக வழங்கப்படும் வகையில் மிக உயர்ந்த சைதன்ய நிலையில் அவர்கள் வாழ்கின்றனர். பெப்ரவரி 13 ஆம் திகதி, ஸ்ரீப்ரீதாஜி மற்றும் ஸ்ரீ கிருஷ்ணாஜி ஆகியோர் தங்கள் மகா தபஸைத் தொடங்கிவிட்டனர்.

மார்ச் 7 ஆம் திகதி அன்று, ஸ்ரீ அம்மாவும், ஸ்ரீ பகவானும் தங்கள் ஆசீர்வாதங்களுடன் நம்முடன் இணைவார்கள்.

ஸ்ரீ ப்ரீதாஜி மற்றும் ஸ்ரீ கிருஷ்ணாஜி ஆகியோர் தங்களது மகா தபஸுடன் இணைவார்கள். பெப்ரவரி 13ஆம் திகதி தீக்ஷை கொடுப்பவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட, தீக்ஷைக்குத் தயாரான அனைவரும் அவர்களுடன் தபஸில் இணைவார்கள்.

மற்றும் குறைந்தது 10 மில்லியன் ஒன்னெஸ் மெடிடேட்டர்கள் உலக ஒருமைக்கு தீக்ஷை கொடுப்பார்கள். உலக ஒருமைக்கு பங்களிக்க மார்ச் 7, 2021 அன்று எங்களுடன் இணையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

http://www.ekam.org/world-oneness-day/

இல் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.

# சர்வதேசத்தை பகைத்துக்கொண்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்

## அரசாங்கத்துக்கு சம்பிக்க எச்சரிக்கை



கொழும்பு,மார்ச்.07

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை கையாள அரசாங்கம் எதிர்க்கட்சியுடன் இணைந்து பொதுவான வேலைத்திட்டமொன்றை முன்வைக்க வேண்டும். இதற்கு அரசாங்கம் எதிர்க்கட்சியுடன் கலந்துரையாட வேண்டும். இப்போது அரசாங்கம் தன்னிச்சையாக செயல்பட்டால் இந்தப் பிரேரணையின் பின்னர் இலங்கை பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், இலங்கை அதனை எவ்வாறு கையாள வேண்டும் என்பது குறித்தும், தேசிய ரீதியில் முன்னெடுக்க வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்தும் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் புதியதொரு பிரேரணையை இலங்கைக்கு எதிராக முன்வைத்து வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. இந்த வாக்கெடுப்பில் எம்மால் வெற்றிகொள்ள முடியுமா? எனத் தெரியவில்லை. ஆனால், இந்தப் பிரேரணையின் பின்னர் இலங்கைக்கு பாரதூரமான விளைவுகள் ஏற்படப் போகின்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது. இப்பொது கொண்டு வரவுள்ள பிரேரணையும் இலங்கை இராணுவத்தினர் யுத்தக் குற்றங்களைப் புரிந்தனர் என்பதை அடிப்படையாகக் கொண்டே முன்வைக்கப்படவுள்ளது. இதற்கு முன்னரும் இதே குற்றச்சாட்டுடன் கொண்டவரப்பட்ட பிரேரணையிலும் நாம் தோல்வியடைந்தோம். அதனைத் தொடர்ந்து ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நீக்கப்பட்டது. பின்னர் பொருளாதார ரீதியில் நெருக்கப்பட்டோம்.

எனினும், 2015 ஆம் ஆண்டு அரசாங்கம் அப்போது கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கியதன் மூலமாக தடை விதிக்கப்பட்டிருந்த சில காரணிகளிலிருந்து எம்மை விடுவித்துக்கொண்டு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையைப் பெற்றுக்கொண்டு ஐரோப்பிய நாடுகளையும், அமெரிக்காவையும் நட்பாக்கிக்கொண்டோம். ஆனால், மீண்டும் இந்த அரசாங்கம் தன்னிச்சையான தீர்மானங்களை எடுப்பதாகக் கூறி மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் நாட்டுக்கு எதிரான மோசமான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன- என்றார். (எ)

# வடக்கில் பதிவான துன்பியல் சம்பவங்கள்: ஹிருணிகா பிரேமச்சந்திர கவலை!

கொழும்பு, மார்ச்.07

பெண்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் அல்லது அவர்களால் விடப்படும் தவறுகள் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பல்வேறு கருத்துக்கள் பகிரப்படுகின்றமை கவலைக்குரியது. இவ்வாறான சம்பவங்களின் பின்னணியை அறியாமல் பெண்கள் விமர்சிக்கப்படுவது முற்போக்கான செயல்பாடு அல்ல என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

அண்மைக்காலமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. அத்தோடு கொடூரமான சம்பவங்கள் சமூக வலைத்தளங்களில் கேலிக்குள்ளாக்கப்படுகின்றன.

கடந்த வாரம் 8 மாதக் குழந்தையொன்றை இளம் தாயொருவர் தாக்கும் காணொலி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டது. இது கவலைக்குரிய விடயமாகும்.

மேலும், வடக்கில் தாயொருவர் வறுமை காரணமாக தன் மூன்று பிள்ளைகளுடன் கிணற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளார். அரசாங்கத்தால் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையே இவ்வாறான சம்பவங்கள் பதிவாகக் காரணமாகும். வெகுவிரைவில் இலங்கை ஆர்ஜென்டினா உள்ளிட்ட நாடுகளைப் போன்றதாகி விடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## இதுவும் நடந்தது!

என்றும் சந்தித்திராத தோல்வியை கடந்த தேர்தலில் கூட்டமைப்பு சந்தித்த பின்னர், அந்தத் தோல்விக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை எதிர்காலத்தில் நடக்காமல் பார்த்துக்கொள்ளும் என்றே பலரும் எதிர்பார்த்தனர்.

எதிர்பார்த்தது போலவே தோல்விக்கான காணங்களைக் கண்டறிய குழு ஒன்று அமைக்கப்போவதாக தமிழரசுக்கட்சி அறிவித்திருந்தது. வழக்கம்போலவே அறிவித்தல்களுடன் அதுவும் காணாமல் போனது.

கூட்டமைப்பின் தோல்விக்கு காரணம் என்ன என்பது, ஒன்றும் குழு அமைத்து ஆராயப்படவேண்டிய ஒன்றல்ல என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் இன்னுமொரு தேர்தலைச் சந்திப்பதற்கு முன்னர் கூட்டமைப்பு தனது தவறுகளை திருத்திக்கொள்ளாவிட்டால் அடுத்தத் தேர்தலில் இன்னும் மோசமான முடிவுகளைச் சந்திக்கும் என்பதும் ஆய்வுக்குரியதல்ல.

இதனை தெரிந்துகொண்டதால்தான் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் ரெலோ என்ற தமிழீழ விடுதலை இயக்கமும், புளொட் என்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் கடந்த தேர்தலின் பின்னர் சில கோரிக்கைகளை முன்வைத்தன. கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியும் பாராளுமன்ற கொறடா பதவியும் மாற்றப் படவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை முன்வைத்தபோது, அது நடக்காவிட்டால் அவர்கள் இருவரும் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டே தனித்து இயங்குவார்கள் என்றும் கதையளக்கப்பட்டது.

கூட்டமைப்பின் பேச்சாளராக ரெலோ செல்வம் அடைக்கலநாதனை நியமிக்கவேண்டும் என்ற கோரிக் கையை சம்பந்தன் ஏற்றுக் கொண்டதாகவும் கூட சில செய்திகள் வெளி வந்தன.

ஆனால் எதுவுமே நடக்கவில்லை. நடக்கப்போவதில்லை என்பதும் முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்டது தான். அவர்கள் என்னதான் துள்ளிக் குதித்தாலும் கூட்டமைப்பை விட்டு வெளியேற மாட்டார்கள் என்பது தெரிந்த சங்கதிதான்.

கடந்த நல்லாட்சிக்காலத்தில் கூட்டமைப்பு எந்தத் தவறுகளைச் செய்ததோ அதே பாணியிலேயே தொடர்ந்து சென்றுகொண்டிருக்கின்றது என்பதை தமிழரசுக்கட்சியின் தலைமையோ அல்லது பங்காளிக் கட்சிகளின் தலைவர்களோ கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

பேச்சாளர் பதவிக்காக காத்திருந்த ரெலோ, தமது கோரிக்கையை ஞாபகப்படுத்துவதற்காகவோ என்னவோ இப்போது, தனது கட்சிக்கு ஒருவரை பேச்சாளராக அண்மையில் அறிவித்திருக்கின்றது.

இவ்வாறு ஞாபகப்படுத்துவதன் மூலம் எதுவும் நடந்துவிடப்போவதில்லை.

இத்தகைய நகர்வுகள் எதுவும் எந்த வகையிலும் தமிழ்மக்களுக்கு உதவப்போவதுமில்லை!

- ஊர்க்குருவி

# இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை ஐ.நாவில் நிறைவேற்றியே ஆக வேண்டும்

## சாணக்கியன் எம்.பி.வலியுறுத்து

மட்டக்களப்பு, மார்ச்.07

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை எவ்வாறாவது நிறைவேற்றியே ஆக வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் செயல்பாடுகளுக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து அனைத்து நாடுகளையும் நாங்கள் ஊக்கப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டு. ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் இடம்பெற்றன. ஆனால், பெயரளவில் தான் அவற்றை அபிவிருத்திக் கூட்டம் என்று சொல்லாம். அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிதியினை உரிய அதிகாரிகள் பொருத்தமான இடங்களுக்கு பகிர்ந்த விடயங்களை அபிவிருத்திக் குழுத் தலைவர் என்ற ரீதியில் ஒருவர் இருந்து அனுமதி வழங்கியது மாத்திரம் தான் அதில் இடம்பெற்றன. மக்களின் முக்கிய பிரச்னைகள் குறித்த நாங்கள் பல விவாதங்களை மேற்கொண்டும் அவற்றுக்கான எவ்வித தீர்மானங்களும் அக்கூட்டங்களில் எடுக்கப்படவில்லை.

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் மண்அகழ்வு, இல்மனைட்டு, தொல்பொருள், மேய்ச்சல்தரைப் பிரச்சனை போன்ற பல பிரச்சினைகள் தொடர்பில் எங்களால் கேள்வியெழுப்பப்பட்டன. அதிலும் குறிப்பாக மண் அகழ்வு தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான அதிகாரி அதாவது பதில் வழங்கக் கூடிய அதிகாரி எவ்வித கூட்டங்களுக்கும் கலந்து கொள்ளவில்லை. பதில் சொல்ல முடியாத கனிஸ்ட அதிகாரிகளே அக்கூட்டங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தார்கள். இந்த மாவட்டத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் எவ்வித கவனமும் எடுப்பதாக அந்தக் கூட்டங்கள் நடைபெறவில்லை. தங்களுடைய அரசியலை வளர்த்துக் கொள்வதற்கான கூட்டமாகவே இது மாற்றப்பட்டிருந்தது.- என்றார். (எ)

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

ஈழநாடு
Eelanadu

# ஐ.நா. மனிதஉரிமை ஆணையரை இலங்கைக்கு அழைக்க தீர்மானம்



கொழும்பு, மார்ச் 07

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டை இலங்கைக்கு அழைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

**ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன இதனைத் தெரிவித்தார்.**

படையினருக்கு எதிராக மனித உரி மைகள் மீறல் தொடர்பிலான குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றின் உண்மை நிலையை அறிந்துகொள்வதற்காக ஐ.நா. பிரதி நிதிகளை நாட்டுக்கு அழைக்க அர சாங்கம் ஆலோசனை செய்து வருகிறது என அவர் கூறினார்.

அந்தவகையில் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் மற்றும் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் முக்கியமான நாடுகளின் பிரதி நிதிகளை இலங்கைக்கு விஜயம் செய்யும்படி அழைப்பு விடுக்கவுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

# கொரோனா தடுப்பூசி வழங்க லஞ்சம் வாங்கியவர் சிக்கினார்

## 20 ஆயிரம் ரூபா பறிமுதல்

கொழும்பு, மார்ச்.07

கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கு ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற சுகாதார மருத்துவ பிரிவின் அலுவலக உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: மேல் மாகாண புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு மருதானை பகுதியில் கொரோனா தடுப்பூசி வழங்கப்படும் இடத்தில், தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளவரும் நபர்களிடம் இலஞ்சம் கோரப்படுவதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனைத் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், நேற்றுச் சனிக்கிழமை சந்தேக நபர் 1000 ரூபா பணத்தை இலஞ்சமாக பெற்றுக்கொள்ளும் போது கைது செய்தனர். அவரிடமிருந்து 20 ஆயிரம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார், அவரை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (எ)

# இராணுவத்தளபதிக்கு கொரோனா தடுப்பூசி




இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுச் சனிக்கிழமை கொழும்பில் இராணுவ வைத்தியசாலையில் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராசெனேகா கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்.

நாட்டின் பல பகுதிகளில் கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதை தொடர்ந்து நேற்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே அருகில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# வவுனியாவில் இராணுவத்தினர் தகவல் சேகரிப்பு

## மக்கள் அச்சம்

வவுனியா, மார்ச்.07

வவுனியாவில் சில கிராமங்களில் இராணுவத்தினர் குடியிருப்பாளர்களின் விபரங்களைச் சேகரித்து வருவதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

வவுனியா புதிய சேலர் சின்னக் குளத்தில் கடந்த இரண்டு நாள்களாக வீடு வீடாகச் சென்ற இராணுவத்தினர் இவ்வாறு பதிவுகளை மேற்கொண்டனர் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பதிவின்போது, வாழ்வாதார உதவிகள் வழங்கப்போகின்றோம் என இராணுவத்தினர் குடியிருப்பாளர்களிடம் தெரிவித்ததாகவும், வீட்டில் வசிப்பவர்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம், வயது, தொலைபேசி இலக்கம் என்பன கோரப்படுவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

தற்போதைய சூழலில் இராணுவத்தினரால் இவ்வாறு தகவல் சேகரிக்கப்படுகின்றமை தொடர்பில் தமக்கு அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர். (எ)


## ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ

**அரிசி ஆலை விற்பனைக்கு**

**அமைவிடம்:** புத்தூர் தெற்கு புத்தூரில் பெறுமதி மிக்க அரிசி ஆலை

அளவு - காணி-16 பரப்பு 15.5 குளி அரிசி ஆலை (விசாலமான நெல் உலர வைக்கும் பகுதி, நெல்தானிய சேமிப்புப் பகுதி (02), நெல் ஊற வைக்கும் பெரிய தொட்டிகள் (04), அலுவலக அறை, சமையலறை, ஊழியர் ஓய்வு அறை, கால்நடை வளர்ப்புப் பகுதி (100 வரை), உயிர்வாயு உற்பத்தி செய்யும் பகுதி அடங்கலாக)

**காணி விற்பனைக்கு**

**அமைவிடம் :** மானிப்பாய் வீதி கைதடியில் நன்னீர் வெட்டுக் கிணற்றுடன் கூடிய தென்னைப் பயிர்ச்செய்கைக்கு மிகவும் உகந்த பெறுமதியான காணிகள்

அளவு -
(1) காணி -15 பரப்பு 10.14 குளி
கட்டடம் -737 சதுர அடி
(2) காணி -13 பரப்பு 10.14 குளி





**அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்**
021 224 0303, 021 224 0304
021 225 0065, 021 225 0067
011 266 1866

**கைத்தொலைபேசி இலக்கங்கள்**
077 880 2757 (திரு.சுகன்) 077 786 3040 (திரு.பெனட்)
076 131 1392 (திரு.ஜெரி)
தொலை நகல் 011 266 2820. ஈமெயில்-recovery@hnb.lk
**கேள்விக் கோரிக்கைகளை கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்.**
**Head of Recoveries, Hatton National Bank PLC,**
**Recoveries Department,**
**Level 18, HNB Towers, No.479, T.B Jayah Mawatha,**
**Colombo 10.**



அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| **17594 \| வே \|1987**<br>உடுவில்\|இந்து\|சூ.செவ்:09<br>Security Officer\|Singapore<br>கிபா-32\|உத்தரம்(கன்னி)\|175செ.மீ | **17486\| வே \|1993**<br>மட்டுவில்\| இந்து\|Switzerland<br>N/A\|156 செ.மீ \|செவ் : 07<br>கார்த்திகை (மேடம்) |
| **17459\|வே \|1987**<br>பருத்தித்துறை\|இந்து\|செவ்:04<br>Samurthi Officer\|Sri Lanka<br>அஸ்வினி(மேடம்)\|167செ.மீ | **17666\| வே \|1993**<br>நெல்லியடி\|இந்து\|N/A<br>Sri Lanka\|168செ.மீ\| கி.பா: 40<br>மிருகசீரிடம்(ரிஷபம்) |
| **17396\| ந\|1988**<br>சுன்னாக நகரம்\| இந்து\|செவ்:01<br>Machine Operator \|Germany<br>திருவோணம்(மகரம்)\| 171செ.மீ | **17534\| ந \|1993**<br>சரசாலை\| இந்து \|Sri lanka<br>Engineering Assistant<br>சதயம்(கும்பம்)\|165செ.மீ<br>கி.பா: 19.50 \|செவ் : 01 |
| **17561\|வே \|1988**<br>சமளன்குளம்\| இந்து \|<br>Technical Officer\|Sri lanka<br>சதயம்(கும்பம்)\| 182செ.மீ | **17525\|கோ\|1993**<br>பருத்தித்துறை\|இந்து\|செவ் : 07<br>Sri Lanka\|அஸ்வினி(மேடம்)<br>N/A\| 154செ.மீ |
| **17567\| ந \|1988**<br>நீர்வேலி\| இந்து \|பூராடம்(தனுசு)<br>Staff\|France\|செவ்:02\|175செ.மீ | **17441\|ப\|1994**<br>ஏளாலை\|இந்து\|செவ் : 04<br>Accountant\|Denmark<br>பூரம்(சிம்மம்)\|175செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com



DHL உள்நாடு, வெளிநாடுகளுக்கான
விரைவு பொதிகள் சேவை
உள்நாடு யாழ். - கொழு. கொழு. - யாழ். 12 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்
வெளிநாடு 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும்
Lanka Cargo Worldwide Express (நிபந்தனைக்குட்பட்டது)
315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 283 2397 / 076 485 4092








விசேட விலையில் மடிக்கணனி



Laptop 4GB Ram
1 TB HDD Windows 10
HP i3
Free Bag
கையிருப்பு உள்ளவரை
St.Antonys Computer
189, K.K.S Road, Jaffna Town, Jaffna.
021 222 4865 / 075 069 8608

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை



**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : HELLO கோடம்பாக்கம்
**இரவு**
7.00 மணி : SPOT LIGHT- யாழ் மாவட்ட
நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம்




10.00 மணி: பதிவு

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே
(நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள் (நேரலை)

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் சித்தன்கேணி நாககன்னி அம்மன் கோவில்
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் சுன்னாகம் நவகாளி அம்மன் கோவில் தேர்த்திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் சித்தன்கேணி நாககன்னி அம்மன் கோவில்

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.